# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




திங்கட்கிழமை 20.12.2021 supeedsam.com supeedsam@gmail.com

# தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சீனா ஏன் மௌனம்?



(ராஜ்)

'போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். ஆனால், சீனா இது தொடர்பில் இதுவரை அக்கறை செலுத்தவில்லை.' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ட்சீ சென்ஹோங் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களுக்குக் கடந்த சில தினங்களாகப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தினை விரும்பவில்லை

### சுமந்திரன் தெரிவிப்பு




(ஜுட்)

வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தினை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக பயணங்களின் பெறுபேறுகளை எதிர்வரும் வருடம்

02 ஆம் பக்கத்தில்...

## சீனர்களே தயவு செய்து கிழக்கு மாகாணத்திற்கு வராதீர்கள்

### சாணக்கியன் பகிரங்கமாக தெரிவிப்பு



(எருவில் துசி)

சீனர்களே தயவு செய்து கிழக்கு மாகாணத்திற்கு வராதீர்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு சித்தாண்டியில் சிகண்டி அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு

02 ஆம் பக்கத்தில்...

### சீனத்தூதுவரின் இலங்கையின் வட புல விஜயம்

## சீனாவின் பாய்ச்சல் தந்திரமும் இந்தியாவின் பதுங்கல் மந்திரமும்

### மட்டக்களப்பு முன்னாள் பா.உ. ஜி.ஸ்ரீநேசன்



சீனத்தூதுவர் கீ சென் ஹொங் அவர்கள் 3 நாட்கள் வட புல விஜயத்தை மேற்கொண்டு முடித்துவிட்டு கொழும்பு திரும்பியுள்ளார். அவருடன் அரசியல் அதிகாரி,தூதரகப்பாதுகாப்பு அதிகாரி என்று முக்கியஸ்தர்கள் சென்றுள்ளனர். அதாவது இராஜதந்திரம்,

02 ஆம் பக்கத்தில்...



## நிருவாகத் துறையும் இந்த நாட்டில் மோசமான நிலையில் இருக்கின்றது

### அதற்கு உதாரணம் மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் நியமனம்

(சுமன்)

நிருவாகத் துறையும் இந்த நாட்டில் மோசமான நிலையில் இருக்கின்றது என்பது எமது மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிர்கேட்டினைக் கொண்டு அறிய முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

15 ஆம் பக்கத்தில்...

## "கூட்டமைப்பு இனியும் பதிவு செய்யப்படாத கட்சியாக இருக்க முடியாது"

(மட்டு.நிருபர்)

தமிழ் தேசிய கூட்டமைப்பு இனியும் பதிவுசெய்யப்படாமல் இருக்க முடியாது என்பதில் தமிழீழ விடுதலை இயக்கம் உறுதியாகவுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான

15 ஆம் பக்கத்தில்...

## எனக்கு அரசியல் அறிவை ஊட்டியது சிறைச்சாலையில் வாசித்த புத்தகங்களே



( ந.குகதர்சன்)

நான் அரசியல் ரீதியாக மாற்றப்பட்டு அரசியல் செய்ய வேண்டும் என்று தூண்டப்பட்ட போது எனக்கு உலகத்தை பார்ப்பதற்கு நிச்சயமாக புத்தகங்களை பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது அந்த சந்தர்ப்பத்தில்தான் வாசிப்பின் மூலம் உலகத்தை அறிந்து கொண்டேன் என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வாழைச்சேனை - பேத்தாளை பொது நூலகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

02 ஆம் பக்கத்தில்...

## கட்டாயமாகிறது தடுப்பூசி அட்டை

(காந்தன்)

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் பொது இடங்களில் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட

02 ஆம் பக்கத்தில்...






## இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக சமூகம் விழிப்படைய வேண்டிய தேவை இருக்கின்றது



தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக சமூகம் விழிப்படைய வேண்டிய தேவை இருக்கின்றது என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி இணைப்புக் குழுவின் தலைவருமான நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிராமியப் பாலங்களை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் ஏறாவூரில் 02 பாலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு திறந்து வைக்கும்

02 ஆம் பக்கத்தில்...






## மாகாண சபை தேர்தல் ஒத்திவைக்கப்படாது

மாகாண சபை தேர்தலினை ஒத்திவைக்கும் தீர்மானம் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கெலிஓயா பகுதியிலுள்ள விகாரை ஒன்றில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.







## சீனத்தூதுவரின் இலங்கையின் வட புல விஜயம்

அரசியல், இராணுவம் சார்ந்த மூவர் அங்கு சென்றுள்ளனர்.

மேலும் அவர்கள் சென்ற இடங்களும் முக்கியமானவையாகும். மன்னார் தாழ்வுப்பாட்டு கடற்படை இராணுவ முகாம், இராமர் அணை, நல்லூர் கோவில், யாழ் நூலகம், மன்னார் மீனவர்களுடனான சந்திப்பும் நிவாரணமும் என்ற வகையில் சீனத்தூதுவரின் விஜயம் அமைந்துள்ளது.

குறிப்பாக மன்னாரில் இருந்து 17 கடல் மைல்கள் பயணம் செய்து இராமர் அணைக்குச் சென்று 20 நிமிடங்கள் தரித்து நின்று அவதானிப்புகள் செய்துள்ளார்கள். ஏறத்தாழ இந்தியாவில் இருந்து 15 கி.மீ இலும் குறைவான இடைவெளியில்,கடற்படையின் உதவியுடன் படகில் இந்தியாவுக்கு அண்மையில் சென்று வந்துள்ளார்கள். பயணத்தின் போது நுணுக்கமான கமராக்கள் மூலம் இந்தியாவை அவதானிப்பதற்கு வாய்ப்புள்ளது. மேலும், வட பகுதி மீனவர்களுக்கும்,இந்திய மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலை இருப்பதால் அதனைப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் அந்த மீனவர்களைச் சந்தித்து 20 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான நிவாரணங்கள், வலைகள் வழங்கியுள்ளார். இதன் மூலமாக மீனவர்களின் ஆதரவை தனதாக்க முனைந்துள்ளார். அத்துடன் நல்லூர் கோவிலுக்குச் சென்று வழிபட்டுள்ளார். உண்மையில் சீனக் கம்யூனிசவாதிகள் கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகவாதிகள் ஆவர். ஆனால் யாழ்ப்பாணத் தமிழர்களின் பண்பாட்டினை மதிப்பதன் மூலம் அவர்களோடு உறவுகளை வளர்க்கத் தூதர் விரும்புகின்றார். யாழ் நூலகத்திற்கும் சென்று மடிக்கணணிகள், புத்தகங்களை வழங்கியுள்ளார். இதில் இருந்து படித்த மட்டங்களை கவர நினைத்துள்ளார். மேலும் இந்தத் தரிசிப்பு முடிவல்ல ஆரம்பம் என்றும் கூறியுள்ளார். அதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேயர் மணிவண்ணன் போன்ற அரசியல் முக்கியஸ்தர்களுடனும் அரசியல் தொடர்பினை ஏற்படுத்தியுள்ளார். மொத்தத்தில் இவரது விஜயமானது சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், தந்திரோபாய , பூகோள, இராணுவத் தொடர்புகள் சார்ந்ததாக அமைந்துள்ளது.அடுத்ததாக வட பகுதி அபிவிருத்திக்காக பில்லியன் கணக்கான டொலர்களை முதலீடு செய்வதற்கு அல்லது கடனாக வழங்குவதற்கு வாய்ப்புகள் உண்டு. அந்த வகையில் தென்னிலங்கைச் சிங்கள மக்களை சீனாவின் செயல்பாடுகளால் கவர்ந்தது போல் வட பகுதி மக்களையும் சீனா கவர்ந்து கொள்வதற்கு கங்கணம் கட்டுகிறது. யுத்தத்தால் அவலப்பட்டு பல இழப்புகளுடன் வறுமையில் வாடும் வட பகுதி மக்களை தனது பண பலத்தால் சீனா வளைத்துவிடுவதன் மூலம் தனது பூகோளரீதியான அரசியல் காலூன்றலை வட பகுதியில் பதிக்க நினைக்கிறது. ஏற்கனவே வட பகுதித் தீவுகள் 3 இல் புதுப்பிக்கத்த தக்க சத்தி உருவாக்கம் என்ற அடிப்படையில் சீனா இந்தியாவுக்கு அண்மையில் காலூன்ற நினைத்தது. அதற்கு இலங்கை அரசு வாய்ப்பளித்தது. ஆனால் வட பகுதி மக்களின் எதிர்ப்புகள், தமிழ் தேசியக் கட்சிகளில் எதிர்ப்பு, இந்தியாவின் எதிர்ப்புக் காரணமாக சீன முதலீட்டாளாகள் அங்கு இருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது. பூரகரிக் கௌதாரிமுனை கடல் அட்டை வளர்ப்பு விடயத்தில் ஈடுபட்ட சீனர்,அங்கு வாழும் மக்களதும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளதும் எதிர்ப்பைச் சந்தித்தனர். இந்த நிலையில் சீனாவின் இராஜதந்திரப் பாய்ச்சல் அணுகுமுறை இப்போது சீனத் தூதுவர் மூலமமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்பந்தான் முடிவல்ல என்றும் சீனத் தூதுவர் கூறியுள்ளார்.

இவ்வாறு சீனா பாய்ச்சல் அணுகுமுறையில் தனது இராஜதந்திர வலையைத் தனது புவிசார்நல அரசியலையும், முத்து மாலை வியூகத்தையும் அனுசரித்து விரிக்கும் போது இந்தியா என்ன செய்கிறது என்பதுதான் எமது கேள்வியாக அமைகிறது. இந்தியா பதுங்கல்நிலை மந்திரத்தோடு இருக்கின்றதா? என்ற கேள்வி எழுகிறது. இலங்கை யுத்தத்தத்திற்குப் பிந்திய அரசியலைப் பார்க்கின்ற போது இந்தியாவின் பாதுகாப்பு ஈழத்தமிழரின் பாதுகாப்பு என்கின்ற இரண்டும் கேள்விக்குறிகளாக்கப் பட்டுள்ளன. சோனியா காந்தியின்யின் தூரப் பார்வையற்ற நிபந்தனையற்ற யுத்த ஆதரவால் ஈழத்தமிழரின் பாதுகாப்பு மட்டுமல்ல இந்தியாவின் பாதுகாப்பும் பலவீனமாகியுள்ளது.

இந்து சமுத்திரத்தில் இராமர் பாலம் வரை அந்த ஆபத்து வந்து சூழ்ந்துள்ளது. சீனாவின் அறிவியல் தொழில் நுட்ப தந்திரோபாயங்களை இந்தியாவின் ஆன்மீக மந்திரோபாயங்களால் மட்டும் வெல்ல முடியாது. அறிவியல் தொழில்நுட்ப ரீதியாக இந்தியாவும் வேகமாகவும் விவேகமாகவும் செயற்பட வேண்டும். அதற்கான வழி இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை சுயாட்சி சுயநிருணய அதிகாரத்துடன் தீர்க்க வழிகோலுவதாகும். தற்போது அமைச்சர் வாசுதேவ ஒரு விடயத்தினைக் கூறுகிறார். இலங்கையின் வட பகுதியில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அபிவிருத்திக்கு இடமளிக்க வேண்டும் என்று கூறுகின்றார். அதாவது இந்தியாவின் வட புல செயற்பாடுகளை சீனாவின் மூலமாகக் கட்டுப்படுத்த நினைக்கிறார் போலத் தெரிகிறது.அதாவது வடபுலத்தில் இந்தியா தமிழர்க்குச் சார்பான நிலையை எடுத்தால்,சீனா சிங்களர்க்குச் சாதகமாக செய்பற்படும் என்று அமைச்சர் நினைப்பது போல் தெரிகிறது. மொத்தத்தில் தென்னிலங்கை மட்டுமல்ல வடக்கு கிழக்கு இலங்கையும் வல்லரசுகளின் போட்டிக்களமாக மாறுவதை ஆட்சியாளர்கள் விரும்புவது போல் தெரிகிறது. தாமதம் ஆபத்தானது (Delay is dangerous ) என்பதை இந்தியா உணர்ந்தால் நல்லது. ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் பலமான சமஷ்டி சுயாட்சித் தீர்வே இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்க்கும் பாதுகாப்பாக அமையும்.

## வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரசன்னத்தினை விரும்பவில்லை

ஜனவரியிலிருந்து உணர்ந்து கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை 'சிதைந்து போகிற தமிழ்த் தேசியமும் சிந்திக்காத தலைமைகளும்' எனும் தலைப்பில் கருத்துப்பகிர்வுறவாடல் நிகழ்வு யாழ் கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாட்டுக் கொள்கைகள் இன்றிச் செயற்படவில்லை. முறையான அணுகுமுறைகளை உரிய தருணங்களில் மேற்கொண்டே வந்திருக்கின்றது. அதனைப் பலர் அறிவதில்லை. தற்போது கூட அமெரிக்கப் பயணத்தின் பின்னனர் இலங்கையில் உள்ள உயர்ஸ்தானிகர்களைச் சந்தித்து கலந்துரையாடல்களைச் செய்துள்ளேன்.

ஆனால் அந்தச் சந்திப்புக்கள் புகைப்படங்களை பிடித்து முகநூலில் போட்டு பிரசாரம் செய்வதற்குரியவை அல்ல.

ஆகவே,வெளிவிவகார விடயங்களை முறையாக கையாளவில்லை என்ற கவலை யாருக்கும் தேவையில்லை.

அது முறையாக முன்னெடுக்கப்பட்டே வரப்படுகின்றது. அதன் காரணமாகவே ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இன்னமும் தமிழர்களின் விவகாரம் உயிர்ப்புடன் இருக்கின்றது.

அண்மையில் எனது தலைமையில் அமெரிக்காவுக்குச் சென்ற குழுவானது முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளது. அந்தச் சந்திப்புக்கள் பற்றி இந்தப் பொதுவெளியில் பகிரங்கமாக அனைத்தையும் கூறிவிட முடியாது.

ஆனால் 2011ஆம் ஆண்டு இவ்விதமானதொரு பயணம் நடைபெற்றது. அதன் பின்னர் தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு தமிழர்களின் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்கள் சென்றிருந்தன. தொடர்ச்சியாக அது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் கரிசனையிலும் காணப்படுகின்றது.

அதேபோன்று தான் தற்போதைய விஜயத்தின் பெறுபேறுகளை உடனடியாக கண்டுவிட முடியாது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அப்பெறுபேறுகளை அனைவரும் உணரக்கூடியதாக இருக்கும்.

தற்போது அமெரிக்காவும், இந்தியாவும் ஒரு நிரலில் உள்ள நிலையில் இந்தியாவை விட்டு அமெரிக்காவிடம் சென்றதாக விமர்சனம் செய்கின்றார்கள். அவ்வாறில்லை. இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்த நிலையில் தான் உள்ளது என்பதை நாம் அறிவோம்.இரு நாடுகளும் இணைந்தே அடுத்த கட்ட விடயங்களை முன்னெடுக்கப்போகின்றன. வொஷிங்டனும் புதுடெல்லியும் அதுபற்றிய உரையாடலில் தொடர்ச்சியாக இருக்கின்றன. ஆகவே டெல்லியை விட்டு வொஷிங்டனிடத்திலோ, வொஷிங்டனை விட்டு டெல்லியிடத்திலோ சென்றதாக அச்சப்பட வேண்டியதில்லை.

மேலும் வடக்கு கிழக்கில் சீனா பிரசன்னம் செய்வதை நாம் விரும்பவில்லை. இதனை நாம் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் தெரிவித்து விட்டோம். வடக்கு கிழக்கில் பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீடிப்பதை சில தரப்புக்கள் விரும்புகின்றன.ஆனால் அவ்விதமான நிலைமை தொடருமாக இருந்தால் வெளித்தரப்புக்களின் தலையீட்டுக்கு அது வழிவகுத்து விடும்.

ஆகவே பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று நாம் தெளிவாக கூறிவிட்டோம். மேலும், வடக்கு கிழக்கில் சீன பிரசன்னத்தினை நாம் விரும்பவில்லை என்பதற்கு காரணங்கள் உள்ளன. குறிப்பாக சீனா மனித உரிமைகளையோ ஜனநாயகத்தினையோ பொருட்டாக கொள்வதில்லை. அவ்வாறான நிலையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் ஜனநாயக முறையில் பொறுப்புக்கூறலையும் எதிர்பார்க்கும் தமிழ் தரப்பு சீனாவினை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேநேரம், இலங்கைத் தீவும், வடக்கு, கிழக்கும் தென்சீனக் கடலில் இருக்கவில்லை. அது இந்து சமுத்திரத்தில் இந்தியாவுக்கு மிக அருகில் வெறும் 32 கிலோமீற்றர் தொலைவிலேயே உள்ளது. அவ்வாறிருக்கையில் இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகளையே தமிழ்த் தரப்பு உள்வாங்கிக் கொள்ள முடியும். ஆகவே சீனாவின் பிரசன்னம் இந்தியாவுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். மேலும் இந்தியா தமிழர்கள் விடயத்தில் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் இருந்து வந்துள்ளது. அவ்வாறான நிலையில் சீனாவை தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## கட்டாயமாகிறது தடுப்பூசி அட்டை

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனவே கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் தடுப்பூசியை பெற்றுக் கொள்வது சகல பிரஜைகளின் பொறுப்பாகும் எனவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்தார்.

## இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக சமூகம்

நிகழ்வு நேற்று ஏறாவூர் நகரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்,

ஏறாவூரின் பிரதேச எல்லை விஸ்தரிக்கப் படவேண்டிய தேவை இருக்கிறது. ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவில் 32 கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் 31 வருடங்களாக விரட்டியடிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வளவு காலங்களும் அவர்கள் அங்கு வசித்திருந்தால் அந்தக் கிராமங்கள் நகரங்களாக மாறியிருக்கும். அவ்வாறு எங்களுடைய உரிமைகளைப் பறித்து விட்டு எங்களை வாய்மூடி மௌனியாக இருக்கச் சொல்லுகின்ற விடயம் எவ்வாறு நியாயமாகும்.

ஒரு இனத்தின் உரிமையைக் கேட்பது இனவாதமல்ல அது கடமை. இன்னுமொரு இனத்திற்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய உரிமைகளை மறுப்பதும் தடுப்பதுதான் இனவாதம். வடக்கிலே இருந்து எல்ரீரீஈ இனரால் முஸ்லிம் சமூகம் மாத்திரம் வெளியேற்றப்பட்டது இனவாதம்.

ஏறாவூரில் நடுநிசியில் உறக்கத்திலிருந்து முஸ்லிம்களை மாத்திரம் குறி வைத்து கொன்றொழித்தது இனவாதம். காத்தான்குடியிலே பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்களைச் சுட்டு அழித்தது இனவாதம். முஸ்லிம்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக மட்டக்களப்பு மாவடடத்திலே முஸ்லிம்கள் வாழ்ந்த 32 கிராமங்களை விட்டும் முஸ்லிம்களைத் துரத்தி அடித்து வெளியேற்றியது இனவாதம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவுகளில் 26 சத வீதம் வாழ்கின்ற முஸ்லிம்கள் வெறும் 1.3 வீதக் காணிகளுக்குள்ளேயே முடக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 2640 சதுர கிலோமீற்றர் காணிகளில் குறைந்த பட்சம் முஸ்லிம்களுக்கு 800 சதுர கிலோமீற்றராவது தரப்பட வேண்டும். இந்த விடயத்தில் சமூகம் விழிப்படைய வேண்டிய தேவை இருக்கின்றது. என தெரிவித்துள்ளார்.

## நிருவாகத் துறையும் இந்த நாட்டில் மோசமான

இடம் பெற்ற வல்லகி சிறப்பு மலர் வெளியீடு மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

சோசலிசம் என்றால் என்ன அரசியல் என்றால் என்ன மகாத்மா காந்தி என்றால் யார் என்ற தேடலின் போது அது தொடர்பான புத்தகங்களை வாசிக்க தொடங்கியதன் பயனாக எனக்கு அது தொடர்பான அறிவு கிடைத்தது. 2006 தொடக்கம் 2008ம் ஆண்டுவரை அதிகமான புத்தகங்களை மிகவும் கஸ்டப்பட்டு படிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது அதன் தாக்கம்தான் இந்த நூல் நிலையம் உறுவாக காரணமாக அமைந்தது.

நான் மிக சிறந்த நூல்களை வாசித்துள்ளேன் அப்துல் கலாமினுடைய அக்னி சிறகுகள் என்ற நூல் மிகவும் பிரயோசனமான நூல் அந்த புத்தகத்தை படித்தவர்களுக்குத் தெரியும் அவருடன் நெருங்கிப் பழகிய ஒரு என்னத்தை உறுவாக்கும். அதே போன்று வெளிநாட்டுக்கு சென்றிருந்த போது எனக்கு நண்பர் ஒருவர் நேரத்தை வீனடிக்காமல் புத்தகங்களை படியுங்கள் என்று ஒரு புத்தகத்தை அன்பளிப்பு செய்திருந்தார் அந்த புத்தகத்தின் பெயர் டொலர் தேசம் என்ற புத்தகம் ஆறு மணித்தியாலங்கள் தொடர்ந்து படித்தாலும் அலுப்புத் தட்டாமல் படிக்கக்கூடிய பிரயோசனமான புத்தகம் அதனால் சொல்கிறேன் வாசிப்பு ஒரு மனிதனனை நிச்சயம் சிறந்த ஓர் பிரஜையாக மாற்றும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் நுலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஸ், ஊவா பல்கலைக்கழக சிரேஸ்ட உதவி நூலகர் ரீ.பிரதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நுலகத்தின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு அதிதிகளால் கேக் வெட்டப்பட்டதுடன் வாசிகசாலையின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு வல்லகி என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டதுடன் வாசிகசாலையால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் அதிதிகளுக்கும் வாசிகசாலையின் வளர்ச்சியில் பங்காற்றியவர்களுக்கும் நினைவு சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

## சீனர்களே தயவு செய்து கிழக்கு மாகாணத்திற்கு

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

சீனர்களே கிழக்கு மாகாணத்திற்கு வராதீர்கள் ஏனென்றால் எமது சொத்துக்களை உங்களுக்கு விற்பதற்கு எமது தமிழ்பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவுள்ளார்கள். அதன்பின் எமது பிரதேசம் சீனமயமாகிவிடும் தங்கள் வருகையை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

தேசிய பாடசாலை என்ற போர்வையில் தற்போது புது நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றது.தமிழ் மக்களின் கைகளில் இருக்கும் அதிகாரத்தை பறித்தெடுக்கும் நடவடிக்கைதான் இது.

மட்டக்களப்பில் தற்போது யூரியாவின் விலை 30ஆயிரம் ரூபா இதனையும் நமது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்தான் தனது உறவினரைக்கொண்டு வியாபாரம் செய்கின்றார்.ஐயாயிரம் ரூபாவுக்கு உரம் வாங்கப்பட்டு 30ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

கிழக்கை மீட்போம் என வந்தவர்கள் கிழக்கை கொள்ளையடிக்கின்றார்கள்.கிழக்கில் உள்ள ஆளுநர் பெரும்பான்மைச்சமுகத்தின் காவலராகவே இங்கு வந்துள்ளார். இவரின் ஒத்துழைப்புடனுடன் நமது தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் நல்லாசிகளுடன் தமிழ்பேசாத ஒருவரை முதலமைச்சராக முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

நாங்கள் அண்மையில் சர்வதேச பிரதிநிதிகள் பலரை சந்திருந்தோம் .இதில் எல்லாவிடயங்களையும் கூறமுடியாது ஆனால் 2022இல் தமிழர்களுக்கு நல்ல விடயங்கள் நடக்கும் ஆண்டாக அமையும் என நினைக்கின்றேன்

காணியதிகாரம் வேண்டும். இதனைத்தான் நாங்கள் அரசியல் உரிமை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காணியதிகாரம் எங்களிடமிருந்தால் மயிலத்தமடு மாதவனையில் குடியேறியுள்ளவர்களை நாங்களே அதிகாரிகளிடம் கூறி வெளியேற்றியிருப்போம். அது நடக்காது போகியிருந்தால் எங்களிடமிருக்கும் பொலிஸ் அதிகாரங்களை கொண்டு செயற்படுத்தியிருப்போம். இன்று நாங்கள் எதையும் செய்ய முடியாது உள்ளோம். எங்களிடம் எந்த அதிகாரமுமில்லை. இப்படி பயணித்தால் வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் இல்லாத நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம். வடக்கு கிழக்கு என்று நாங்கள் பார்க்க முடியாது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்கள் பூர்விகமாக வாழ்ந்த பிரதேசங்கள். அது எங்களின் நிலம் என்றார்.

## தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சீனா

இந்தப் பயணம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

'இலங்கைக்கான எந்தவொரு தூதுவரும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்தையும் பார்வையிட முடியும். அதற்கான உரிமை அவருக்கு உள்ளது.

ஆனால், எம்மையும் எமது மக்களையும் பொறுத்த வரையில் சீனத் தூதுவரின் பயணம் முக்கியமானதல்ல. எம்மைப் பொறுத்தவரையில் சீன நாட்டவரின் அடிப்படைக் கொள்கைகள் என்னவாக உள்ளன என்பதே எமது கேள்வியாகும். இலங்கையில் அரசியல் பிரச்சினைகள் பலமடைந்துள்ளன.

சீனாவோ அல்லது சீனாவின் தூதுவரோ இனப்பிரச்சினை குறித்து அரசியல் தலைமைகளைச் சந்தித்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கவில்லை.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சமத்துவத்தின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும், நியாயத்தின் அடிப்படையில் வாழ வேண்டும் என்பது குறித்து சீனத் தரப்பினர் எதனையும் கூறவில்லை. வடக்கு மாகாணத்துக்குப் பயணம் செய்த சீனத் தூதுவரும் அங்கும் அவ்வாறான கருத்துக்களைக் கூறவில்லை.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் அரசியல் தீர்வு குறித்து முன்னேற்றகரமான கருத்துக்களையே எதிர்பார்க்கின்றனர். சீனத் தூதுவரின் வடக்குக்கான வருகையை நாம் எதிர்க்கவில்லை.

அதேவேளை, இந்தப் பயணம் குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களுக்காக மட்டுமே அமைந்துள்ளது எனக் கருதுகின்றோம். இனப்பிரச்சினை விடயத்தில் சீனாவின் நிலைப்பாடு என்னவிதமாக உள்ளது என்பதே எமக்கு முக்கியம். இந்த விடயத்தில் மக்கள் சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை' என தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று போலிஸ் பிரிவில் நீதவான் வீட்டில் தங்க நகை கொள்ளை

## சம்பவத்தில் நீதவானுக்கும் சிறுகாயங்கள்






**(வி.சுகிர்தகுமார் )**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் நீதவான் ஒருவரின் வீட்டில் இன்று அதிகாலை இடம்பெற்ற தங்க நகை கொள்ளை சம்;பவத்தில் நீதவானுக்கும் சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இச்சம்பவத்தால் குறித்த பிரதேசம் முழுவதும் பரபரப்பாக காணப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் நீதிபதியாக கடமையாற்றும் அக்கரைப்பற்று 8/1 முதலியார் வீதியில் வாழும் குறித்த நீதிபதியின் மனைவியின் சுமார் 11 1/2 புவண் மதிக்கத்தக்க தாலி கொடியே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளதுடன் கொள்ளையிட்டவரை மடக்கிப்பிடிக்க எத்தனித்த நீதவானும் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

சனிக்கிழமை அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் நீதிபதிகள் மற்றும் அம்பாரை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள்

உயர்மட்ட பொலிசார், இராணுவத்தினர் புலனாய்வு பிரிவினர் என பல்வேறு தரப்பினரும் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளை பல்வேறு கோணங்களிலும் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது. குறித்த வீட்டில் நீதவான் மற்றும் மனைவி பிள்ளைகள் உறக்கத்தில் இருந்த அதிகாலை நேரம் இரண்டு மணியளவில் வீட்டின் மேல்தட்டு ஜன்னல் கிரிலை உடைத்து அதன் வழியாக உள்நுழைந்த திருடன் படுக்கை அறையில் தூக்கத்தில் இருந்த நீதவானின் மனைவியின் தாலியை அறுத்து எடுத்துள்ளான்.

இந்நிலையில் தாலி அறுக்கப்படுவதை சடுதியாக உணர்ந்த மனைவி சத்தம்போடவே கண்விழித்துக்கொண்ட நீதவான் கொள்ளையனை மடக்கிப்பிடிக்க போராடியுள்ளார். ஆயினும் கொள்ளையிட்டவன் நீதிவானின் காலில் கம்பி ஒன்றால் தாக்கியதுடன் கையிலும் பலமாக அடித்துள்ளான். இதனால் நீதவான் காலிலும் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் சுமார் 10 நிமிடங்கள் வரை இடம்பெற்ற நிலையில் கணவன் தாக்கப்படுவதை உணர்ந்த மனைவி கள்வனோடு சண்டையிட்டு அவரை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் கள்வன் தாலியுடன் ஏற்கனவே திறந்து வைத்திருந்த கதவின் ஊடாக தப்பித்து சென்றுள்ளான்.

இந்நிலையில் உடன் விரைந்த அக்கரைப்பற்று பொலிசார் தகவல்களை உயர் மட்டங்களுக்கு அறியக்கொடுத்த நிலையில் உயர் மட்ட பொலிஸ் அரச அதிகாரிகள் மற்றும் விசேட தடயவியல் பொலிசார் இணைந்து மோப்ப நாய்களின் உதவியுடன் கொள்ளை சம்மந்தமானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கடந்த இரு வெள்ளிக்கிழமைகளில் குறித்த நேரத்தில் இதுபோன்ற இரு சம்பவங்கள் நடைபெற்ற நிலையில் இச்சம்பவம் மூன்றாவதாக நடைபெற்றுள்ளமை மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# அம்பிளாந்துறை ஆலய வளாகத்திலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

## ஒருவர் கைது

**( எஸ்.சபேசன்)**

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சேனை அம்பிளாந்துறை பிரதேசத்தில் ஆலய வளாகத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவரை கொலை செய்யப்பட்டதாக கருதிய நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸர் தெரிவித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான முருகப்பன் லோகீதன் (வயது 47) என்பர் தனது வீட்டிலிருந்து அருகில் உள்ள ஆலய வளாகத்தில் இரவில் தங்குவதற்காக வழமை போன்று சென்றிருந்தவர் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மட்டக்ளப்பு நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டபோது மரணமானவரின் கழுத்துப்பகுதியில் காயம் மற்றும் அதிகமான இரத்தப்போக்கு காணப்பட்டதனையடுத்து சம்பவத்தை பொலிஸார் ஊடாக மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் அவர்களுக்கு தெரியப்படுத்திருந்தார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு சென்றிருந்த மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் சம்பவம் பற்றி அவதானித்ததன் பிற்பாடு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படியும் விசாரணைகளை துரிதப்படுத்தும்படியும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சந்தேகத்தின் பேரில் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் குறித்த நபர் தானே கொலையை செய்துள்ளதாக தனது குற்றத்தை ஏற்று கொண்டதுடன் குறித்த நபரை கொலை செய்வதற்காக பயன்படுத்திய கூரிய ஆயுதத்தினை தான் இரகசியமாக வைத்திருந்த இடத்தினை காண்பித்துள்ளதாகவும் தனக்கும் கொலை செய்யப்பட்டவருக்குமிடையே ஏற்பட்ட தனிப்பட்ட பகையினாலேயே அவரை தான் கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள நபர் இன்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் அவர்களின் முன்நிலையில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகவும் தொடர்ந்து கொக்கட்டிச்சோலை பொலிஸர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கந்தளாயில் 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான புதையலை கடத்த முயன்ற இருவர் கைது

**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐந்து மில்லியன் ரூபாய் பெறுமதியான புதையல் பொருளொன்றினை கடத்த முற்பட்ட இருவரை சனிக்கிழமை (18) கைது செய்துள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் கந்தளாய் மற்றும் குருணாகல் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 27 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



சந்தேக நபர்கள் புதையலில் பெறப்பட்ட பழங்கால பொருளொன்றினை திருகோணமலை பகுதியிலிருந்து கொழும்புக்கு கடத்துவதற்கு முயன்ற நிலையிலே இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மறைந்திருந்து சுற்றிவளைப்பு மேற்கொண்டு சந்தேக நபர்களை புதையல் பொருளுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொல்பொருள் தொடர்பான அறிக்கைகளை பெறவுள்ளதோடு, சந்தேக நபர்கள் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஊடகவியலாளருக்கு போலிஸாரால் கோலை மிரட்டல் வழக்கை வாபஸ் பேற கோரி அச்சுறுத்தல்!

**(மாளிகைக்காடு நிருபர்)**

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி (சக்தி TV நியூஸ் பெஸ்ட்) ஒன்றின் பிராந்திய செய்தியாளராக கடமையாற்றிவரும் பாரூக் முஹம்மட் சஹீர் அஹமட் ஆகிய என் மீது அக்கரைப்பற்று பொலிசாரால் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக பாரூக் முஹம்மட் சஹீர் அஹமட் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், தனது பிரத்தியோக வேலை ஒன்றுக்காக அக்கரைப்பற்று பிரதான வீதியில் இருக்கின்ற முஸ்லிம் மையவாடிக்கு முன்னால் சனிக்கிழமை (18) தான் மோட்டார் சைக்கிளில் இரவு 8.35 மணியளவில் பயணம் செய்த போது EP KF 0842 இலக்கமுடைய காரின் அருகில் நின்றிருந்த ஒருவர் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கட்டளையிட்டு கை சைகை ஊடாக கேட்டுக் கொண்டார். உடனே நான் மோட்டார் சைக்கிளை அந்த இடத்தில் நிறுத்தினேன். அதன் பின்னரே அவர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில்



கடமையாற்றும் ஒரு பொலிஸ் அதிகாரி என்பதையும் அவர் சிவிலுடையில் வந்துள்ளதையும் அவதானித்தேன். உடனே அவர் கடும் கோபத்துடன் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் நான் வழக்கு பதிந்துள்ளதாகவும் நான் பதிந்துள்ள வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்றும் அப்படி இல்லாவிட்டால் என்னை இந்த மையவாடிக்கு வெகுவிரைவில் புதைப்பேன் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் நீ யாருடன் மோதுகிறார் என்று உனக்கு தெரியாதா ? வருகின்ற வாரத்துக்குள் மனித உரிமை ஆணைக்குழுவில் பதியப்பட்டுள்ள வழக்கு விசாரணையில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும் என்றும் இல்லாது போனால் காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலில் நீ இடம் பிடிப்பாய். இல்லாது விட்டால் உயிருடன் புதைக்கபடுவாய் என்று அச்சுறுத்தி விட்டு சென்றார்.

இந்த சம்பவம் கடந்த 02.09.2021 அன்று செய்தி ஒன்றை சேகரிப்பதற்காக எனது வீட்டில் இருந்து வெளியில் வந்து வீட்டுக்கு முன்னால் செய்தி சேகரிக்க தயாராகும்போது வீதியால் சென்ற அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு என்னை காட்டுமிராண்டித்தனமாக தாக்கி காயப்படுத்தி இழுத்துச் சென்ற காட்சிகள் செய்திகளில் வெளிவந்திருந்தது. அதன் தொடர்ச்சியாகவே தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக மனித உரிமைகள் மீறல் விசாரணை வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளேன். இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டே இந்த கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்தார்.

# ஒமிக்ரோன் வைரஸ் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கோள்ளவில்லை

## சமன் ரத்தனப்பிரிய தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

'ஒமிக்ரோன்' வைரஸ் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. தவறான அரசியல் தீர்மானத்தால் தான் பாரிய அச்சுறுத்தல் இதற்கு முன்னரும் ஏற்பட்டது. இனியும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட இடமளிக்க முடியாது.ʼʼ என்று அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்தனப்பிரிய தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'ஒமிக்ரோன் பிறழ்வே உலகுக்கு தற்போது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இங்கிலாந்தில் நாளாந்தம் %0 பேர்வரை ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இலங்கைக்கும் அச்சுறுத்தல் உள்ளது. இதுவரை நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வந்த ஒருவருக்கும் ஒமிக்ரோன் உறுதியாகியுள்ளது. அவர் டிசம்பர் 9 ஆம் திகதி இலங்கை வந்துள்ளார். 11 ஆம் திகதிவரை இருந்துள்ளார். டிசம்பர் 9, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கொழும்பில் கசினோ விளையாடியுள்ளார்.



அந்த கசினோ நிலையத்துக்கு வந்தவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. இவ்வாறு செயற்பட்டால் எப்படி ஒமிக்ரோன் பிறழ்வு இலங்கையில் பரவுவதைத் தடுக்க முடியும்?

அவர் வந்த விமானத்தில் இருந்த விமான ஊழியர்கள் மற்றும் விமான நிலையத்துக்குள் தீர்வையற்றக் கடைகளில் இருந்தவர்கள் என பலரும் அவரால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளனர். இவை தொடர்பில் உரிய வகையில் தேடுதல் நடத்தாவிட்டால் எப்படி நிலைமையைக் கட்டுப்படுத்துவது? இது சுகாதார அமைச்சுக்கு விளங்காதது ஏன்?

இலங்கையில் விமான நிலையம் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. நைஜிரியாவுக்கு சென்றுவந்த நிலையில் ஒமிக்ரோன் தொற்றிய தனியார் பல்கலைக்கழக பேராசிரியர் ஒரு தடுப்பூசி கூட பெறவில்லை. அவ்வாறு பெறாதவர் எப்படி வெளிநாடு சென்றிருக்க முடியும்? சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்படுவதில்ல.

வெளிநாட்டில் இருந்துவரும் சுற்றுலாப்பயணிகள், அரசியல் பலம்மிக்க சுற்றுலா ஏஜன்களால் ,தமக்கு தேவையான ஹேட்டல்களுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றது. இது தொடர்பில் சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை.

எமது நாடு ஒரு தீவு. இங்கு வைரஸ் பரவுவதை தடுக்கலாம். 2ஆவது அலையைக்கூட தவறான அரசியல் தீர்மானத்தால்தான் ஏற்பட்டது. இன்று பி.சி.ஆர் பரிசோதனை உரிய வகையில் மேற்கொள்ளப்படுவதில்லை. உண்மையான தரவுகளும் வெளிப்படுத்தப்படுவதில்லை. எவ்வித திட்டமிடல்களும் இன்றி, போலியான தகவல்களை மையப்படுத்தியே தற்போத நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன' என்றார்.

# ௨0௨௨ ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் ஆரம்பம்

## பக்தர்கள் தடுப்பூசி அட்டை வைத்திருக்க வேண்டும், முகக் கவசம் மற்றும் சமூக இடைவெளி கட்டாயம்

**(க.கிஷாந்தன்)**

2022ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் பூரணை தினமான 18.12.2021 அன்று ஆரம்பமாகியது.

சிவனொளிபாதம் (சிங்களவர்கள் ஸ்ரீபாத என்றும் அழைப்பர்) கடல் மட்டத்திலிருந்து (7,359 அடி) உயரமான கூம்பு வடிவிலான மலையாகும். இம்மலையானது சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களுக்கிடையிலான எல்லையில் அமைந்துள்ளது.

லையுச்சியில் காணப்படும் 1.8 மீட்டர் அளவான பாறை அமைப்பு கௌதம புத்தரின் காலடி சுவடாக பௌத்தர்களால் கருதப்படுகிறது.

இந்து சமயங்களின் நம்பிக்கைகளின் படி சிவனின் காலடி சுவடாக கருதப்படுவதோடு இஸ்லாமியர்கள் இதை (பாவா ஆதம் மலை) ஆதாமின் காலடி சுவடாக கருதுகின்றனர்.

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக 17.12.2021 அன்று நள்ளிரவு மலையுச்சிக்கு எடுத்து செல்லப்பட்டதாக சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார். இந்த முறை 4 வீதிகளின் ஊடாக ஊர்வலம் பயணித்தது.

அந்தவகையில் பலாங்கொடை பொகவந்தலாவ வீதியில் ஊர்வலம் பயணித்து, அவிசாவளை, அட்டன் - நல்லதண்ணி ஊடாக சிவனொளிபாதமலைக்கு ஒரு ஊர்வலம் சென்றது. மற்றைய ஊர்வலம் குருவிட்ட இரத்தினபுரி வீதி ஊடாக பயணித்தது. மற்றது, பெல்மதுளை இரத்தினபுரி - ரஜமாவத்தை வழியாக சென்றது.

மேலும், கொரோனா காரணமாக புனித யாத்திரைக் காலங்களில் சிவனொளிபாதமலைக்கு செல்லும் பக்தர்களுக்கான புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பக்தர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான தடுப்பூசி அட்டை அல்லது அதன் நகலை உடன் வைத்திருக்க வேண்டும்.

புதிதாக வெளியிடப்பட்ட விதிமுறைகளில் யாத்திரீகர்கள் தற்காலிக தங்குமிடங்களை ஏற்பாடு செய்யவோ அல்லது பராமரிக்கவோ கூடாதென்று தெரிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் அனுமதியின்றி வர்த்தக நிலையங்களை நிர்மாணிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் யாசகம் எடுப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், முகக் கவசம் மற்றும் சமூக இடைவெளி என்பனவும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. சனிக்கிழமை ஆரம்பமாகிய சிவனொளிபாதமலை பருவகாலம் 2022ஆம் ஆண்டு மே மாதம் 16ம் திகதியுடன் நிறைவடையும் என்பது குறிப்பிடதக்கது.




வெகுவிரைவில் கோலாகலமாக திறக்கப்பட உள்ள
Asiatischer Lebensmittelladen
IMPORTAS
Kings
TRS
Niru
Aachi
LEELA
Maggi
Suryaa
LION
PG tips
Maliban
Rubicon
Double Horse
ELAKKIA
Tilda
OKF
200+பார்க்கிங் வசதியுடன்
HIGHWAY யிலிருந்து 700M தூரம் மட்டுமே!
சுவைமிகுந்த தாயக உணவுகளை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Parkweg 2
4665 Oftringen
Tel : 062 798 11 11
www.importasoftringen.ch


Importas Cash & Carry
Bern & Zürich
Offer From
18.12.2021 to 15.01.2022
(Unsere Öffnungszeiten während der Feiertage finden Sie auf der Rückseite)
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை
Merry Christmas
& HAPPY NEW YEAR
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்
Free* ab 300 CHF
CHF 300 க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு CHF 39.90 பெறுமதியான Rice Cooker இலவசம். 18.12.2021 தொடக்கம் 31.12.2021 வரையே
CHF 119.-
CHF 60.-
அதிரடி விலையில் V Box கொள்வனவு செய்பவர்களுக்கு 50% விலைக்கழிவு.
Nur solange Vorrat reicht.
Einkaufswert ab 300 Fr. Subash Rice Cooker free.




மட்டக்களப்பு களுதாவளை மெதடிஸ்த. தேவாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா மிகவும் சிறப்பான முறையில் நேற்று (19. 12. 2021) அருட்திரு.டீ. வினோத் தலைமையில் இடம்பெற்றது.இந் நிகழ்வில் இத் தேவாலய திருப்பணிகள் குறித்த சிறப்பு மலரினை நூலின் தொகுப்பாசிரியர் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கல்விப் பணிப்பாளர் செ.டானியல் விழாவின் முதன்மை அதிதியான. இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவையின் தலைவர் அருட்கலாநிதி. கே. ஜே. அருள்ராசா ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படு வதையும். அருகில் அருட்திரு. எஸ். டீ. வினோத் உள்ளதையும் படத்தில் காண்க.

(படம். துறைநீலாவணை நிருபர் செ.பேரின்பராசா)

# மருதமுனை ஷம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஷம்ஸ் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் (18) பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் மருதூர்கனி ஞாபகார்த்த ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை தொடர்பான பல்வேறு விடயங்கள் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

கடந்த காலத்தில் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக பாடசாலையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட பணிகள் தொடர்பாக பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் சுகையில் ஜமால்தீன் தெளிவுபடுத்தினார். பாடசாலை கடந்த காலங்களில் எதிர்கொண்டு வந்த சவால்களும், வெற்றி கொள்ளுவதில் பழைய மாணவர்களின் பங்களிப்பு எனும் தலைப்பில் பாடசாலையின் பழைய மாணவரும் பிரதேச செயலாளருமான ஜே லியாக்கத் அலி இங்கு சிறப்புரையாற்றினார். பாடசாலையின் முக்கிய வளமான மாணவர்கள் குறித்து யாழ் மேல் நீதிமன்ற நீதிபதியும் பாடசாலையின் பழைய மாணவருமான ரி.எல். அப்துல் மனாப் கருத்துரை வழங்கினார். கொழும்புக் கிளை சார்பாக பழைய மாணவரும் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் உரையாற்றியதுடன் வெளிநாட்டு கிளை சார்பாக எம்.ஐ.எம்.பர்ஸான் உரையாற்றினார்.

பாடசாலையில் கல்வி அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலை திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர், பொருளாளர் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். எதிர்காலத்தில் பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து முன்கொண்டு செல்ல வேண்டியதன் அவசியம் குறித்தும் இங்கு பலராலும் வலியுறுத்தப்பட்டன.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கற்பிட்டி கிராமங்களுக்கு விஜயம் செய்த ரிஷாட் எம்.பி




புத்தளம் மாவட்டத்துக்கு வியாழக்கிழமை (16) விஜயம் செய்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட நுரைச்சோலை, பூலாச்சேனை, ஆலங்குடா உள்ளிட்ட கிராமங்களை பார்வையிட்டார்.

அத்துடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு, வெள்ள நீர் தேங்கியிருக்கும் பகுதிகளில் நீரினை அகற்றுவதற்கான மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதேவேளை, குறித்த பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புக்களில் கலந்துகொண்ட அவர், கடந்த 06 மாதகால சிறைப்படுத்தலின் போது, தனது விடுதலைக்காக பிரார்த்தித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

# கஷ்ட பிரதேச மாணவர்களின் கல்வி அதிகரிக்க வேலைத்திட்டம்



(ந.குகதர்சன்)

வாகரை கஷ்ட பிரதேச மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை அதிகரிக்கும் வகையில் கதிரவெளியில் அமைந்திருக்கும் 'சுப்பர் கட்' கல்வி நிலையத்தில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஆனந்த இல்லத்தின் அனுசரணையுடன் கடற்கரை வீதி, புச்சாக்கேணி, கதிரவெளியில் அமைந்திருக்கும் 'சுப்பர் கட்' கல்வி நிலையத்தில் இவ்வருடம் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் இலவச கற்றல் செயற்பாடுகளின் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் சு.அரசரெட்ணம், வாகரை மகா வித்தியாலய அதிபர் ரமேஸ் கலைச்செல்வன், காயாங்கேணி சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ்.மோகனசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறித்த கல்வி செயற்பாட்டில் வாகரை கல்விக் கோட்டத்தில் உள்ள சாதாரண மாணவர்களுக்கு நடைபெறுகின்றது.

# 2021 தேசிய மீலாத் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா டிசம்பர் 26

(நிந்தவூர் நிருபர்)

முஸ்லிம் சமய, கலாசார பணபாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியில் நடாத்திய 2021 ம் ஆண்டின் தேசிய மீலாத் தின போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 26.12.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு ஸாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேய்ஹ் எம்.எம்.எம். முப்தி தினகரனுக்குத் தெரிவித்தார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்றாஹிம் அன்சார் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதீதியாக உவா மாகாண ஆளுநர் அல்ஹாஜ் ஏ.ஜே.எம். முஸம்மில் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு விஷேட அதிதிகளாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான அல்ஹாஜ் மர்ஜான் பளீல் மற்றும் கௌரவ காதர் மஸ்தான், மற்றும் புத்த சாசன மத விவகார அமைச்சின் செயலாளர் தேசபந்து பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவர் அல்ஹாஜ் அஹ்கம் உவைஸ் , கௌரவ பிரதமரின் முஸ்லீம் விவகாரத்திற்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் பர்ஸான் மன்சூர் மற்றும் கௌரவ பிரதமரின் முஸ்லிம் விவகாரத்துக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷைய்ஹ் அஸ்ஸைய்யித் ஹஸன் மௌலானா ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளதோடு இந்நிகழ்விற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷேய்ஹ் எம்.எம்.எம். முப்தி தெரிவித்தார்.

# முயற்சியாண்மை பிரதேச மட்ட கண்காட்சி




(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு முயற்சியாண்மை பிரதேச மட்ட கண்காட்சி சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் வாகரை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஏந்திரி .ஜி.அருணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆறுமுகம் சுதாகரன், கணக்காளர் ஜெ .ஜோர்ஜ் ஆனந்தராஜ் ,நிருவாக உத்தியோகத்தர் ஏ.எஸ்.ஏ ஜனாப் ஜெமில் ,சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் ஏ.நஜீம், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சூரியகுமார், முயற்சியாண்மை பயிற்சி உத்தியோகத்தர் ரி.நிலோஷன், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மாவட்ட செயலக மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ்.வினோத், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.நிராஜ்மேனன், கே.லக்ஷிகாஜனனி, செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கொறுக்கா, மிளகு மரக் கன்டுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

கண்காட்சியில் பிரதேச உள்ளூர் உற்பத்தி பொருட்களான உணவு உற்பத்திப் பொருள், இயற்கை பசளை (திரவம்), எண்ணெய், தூள் வகை, நெசவு உற்பத்தி என பல உற்பத்தி பொருட்கள் வைக்கப்பட்டது.

# மட்டக்ளப்பில் சிறு கைத்தோழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு டிஜிடல் கோடுப்பணவுமுறையூடன சந்தை வாய்ப்பு




மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு டிஜிடல் கொடுப்பனவு முறையுடனான சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரனின் வழிகாட்டலில் இம்முறை நத்தார் பண்டிகையினை முன்னிட்டு இச்சந்தை வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அபாயம் நிலவும் இச்சந்தர்ப்பத்தில் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி கொடுக்கல் வாங்கள்களை மேற்கொள்ளும் விதமாக இந் நத்தார் சந்தை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஶ்ரீகாந் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும் இந்நிகழ்வினை ஹட்டன் நெசனல் வங்கி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இந்நிகழ்வின்போது தொடுகையற்ற பணப்பரிமாற்ற சேவை உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளதுடன், உற்பத்தியாளர்களின் பொருட்களும் சந்தைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01

Mattengasse 17, 8005, Zürich, Swiss

info@srijewellery.ch

Sikaram

துரிதபணமாற்றுச்சேவை

Sikaram INTL Gmbh

Heinrich Strasse 120, 8005 Zürich Tel : 044 2410241

sikaramgmbh@gmail.com / www.sikaram.com Fax : 044 2410245

Prasath Coiffeur

Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00

Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

SwissLife Select

சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி

வாகனக் காப்புறுதி

குழந்தைகளுக்கான காப்புறுதி

ஆயுட் காப்புறுதி

சட்டக் காப்புறுதி

Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch

Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

மாணிக்கப்போடி அறக்கட்டளை

REG.NO : TR/I/71

MANIKKAPODY TRUST

MUNAIKKADU, KOKKADDICHOLAI

முடிந்ததைச் செய்வோம் முடிந்தவரை செய்வோம்

Seela Food Gastro AG

044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch

Züricherstrasse 15
8400 Winterthur.

Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில் நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய Online Tech Network நிறுவனத்தில்



ECDL
Office
Windows 10

தொடர்புகளுக்கு
MANOJ MASTER

Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# இனவாதமில்லாத அரசை உருவாக்கி இந்த நாட்டை சஜித் பாரமேடுக்க தயாராக இருக்கிறார்

## பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார

(நூருல் ஹுதா உமர்)

இந்த அரசாங்கம் அப்பாவி மக்களை பற்றி சிந்திப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பாரமெடுக்க எப்போதும் தயாராக உள்ளோம். அதன் பின்னர் மக்களின் பிரச்சினைகளை சுமூகமாக தீர்த்து வைப்போம். இந்த நாட்டை ஊழலில்லாமல் ஆட்சி செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசாவினால் முடியும். இனவாதத்தை கிளறி ஆட்சியை கைப்பற்றிய இந்த அரசாங்கம் கொலை, கொள்ளைகளை செய்துவருகிறது என முன்னாள் பிரதியமைச்சரும், குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான நளின் பண்டார தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹஸனலியின் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று






(19) மாலை இடம்பெற்றபோது அந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியினரால் கடந்த 1994 இற்கு பிறகு இந்த நாட்டில் ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முடியாமலே போகிவிட்டது. 1994 இற்கு பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஸ, மைத்திரிபால சிறிசேன, கோத்தாபாய ராஜபக்ஸ போன்றவர்கள்தான் ஜனாதிபதியாக வந்தார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு சரியான வசதிகளை செய்துகொடுக்க வில்லை. ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் எவ்வளவு முயன்றும் எமது நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியாமல் போனது. பிரதமராகத்தான் இறுதியாக அவரால் வர முடிந்தது.

ஐக்கிய தேசிய கட்சியின் சார்பிலான ஜனாதிபதியாக இருந்த பலரும் விவசாயிகளுக்கு செய்த நல்ல விடயங்களை போன்று அவரால் கூட கடந்த காலங்களில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு ஒழுங்கான தீர்வை முன்வைக்க முடியாமல் போனது.

பசளை, கிருமிநாசிகள் என எதுவுமில்லாது விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். இந்த பிரச்சினைகளுக்கு காரணம் கோத்தாபய இந்த நாட்டின் ஜனாதிபதியானதே. அவர் முன்வைக்கும் திட்டங்கள் யாவும் மூடத்தனமாக உள்ளது. நாட்டில் இப்போது எரிவாயு,பால்மா, மரக்கறி, எரிபொருள், டொலர் என எதுவுமில்லை. வரிசையில் நின்று மக்கள் அத்தியாவசிய பொருள் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயம் என்பது நெற்செய்கை மட்டுமல்ல. மரக்கறி முதல் ஏற்றுமதி பயிர்கள் என எல்லாம் அதில் அடங்கும். எதிர்வரும் புதுவருடத்தில் இருந்து சோற்றுக்கு மிகப்பெரிய பஞ்சம் ஏற்படும். சீனி முதல் பல்வேறு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளது. கடந்த காலங்களில் சீனியில் பாரிய மோசடி நடந்தது. இப்போது விவசாயிகளை காட்டி இந்த அரசாங்கம் கடுமையாக கொள்ளையடிக்கிறது.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாகவே வாழ்கிறார்கள். அவர்களின் ஒற்றுமையை சீரழிப்பது அரசியல்வாதிகளே. ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச மக்களை ஒற்றுமையாக வாழச் செய்ய பல்வேறு திட்டங்களை வைத்துள்ளார். விவசாயிகளுக்கு தேவையானவற்றை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி அரசினால் முடியும். அதனால் ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த எல்லோரும் எங்களின் விவசாய அமைப்புக்களுடனும் கட்சியுடனும் இணைந்து பயணியுங்கள் என்று அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் தவிசாளர் சந்திரதாச கலபதி உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்ததுடன் கலந்து கொண்ட விவசாயிகள் தமது விவசாயம் சார்ந்த பிரச்சினைகள், அரசினால் வழங்கப்படும் நிவாரணங்களில் உள்ள குளறுபடிகள், சோதன பசளையினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தனர்.

# தோழிலாளர்கள் வேலைக்கு திரும்புவதற்கு தீர்மானம் உறுதிமோழிகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் எமது தோழிற்சங்க நடவடிக்கையும் கடுமையாகவே அமையும்

(க.கிஷாந்தன்)

‘ இப்போதுதான் தொழிற்சங்க ஆட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனி போக, போக என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். அக்கரபத்தனை பிளான்டேசனால் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் எமது தொழிற்சங்க நடவடிக்கையும் கடுமையாகவே அமையும் ’ என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள், இன்று (20.12.2021) திங்கட்கிழமை முதல் பணிக்கு திரும்புவார்கள் எனவும், நிர்வாகத்திடமிருந்து எழுத்து மூல உத்தரவாதம் கோரப்பட்டுள்ளதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அக்கரபத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் கடந்த % நாட்களாக பணி புறக்கணிப்பு



போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

நிர்வாகங்களின் கெடுபிடிகளுக்கு எதிராகவும், தமது தொழில் உரிமைகளை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுமே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இ.தொ.கா. உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்தன.

இது தொடர்பில் அட்டனிலுள்ள தொழில் திணைக்களத்தின் அலுவலகத்தில் பேச்சுவார்த்தையும் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில் அக்கரபத்தனை, டயகம ஆகிய தோட்டங்களுக்கு சனிக்கிழமை(18.12.2021) பயணம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட இதொகா பிரமுகர்கள், தொழிலாளர்களுடன் அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடினர். நிர்வாகத் தரப்பில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் பற்றியும் விவரித்தனர்.

அந்தவகையில் தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக கைவிடுவதற்கும், திங்கள் முதல் வேலைக்கு திரும்புவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மக்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறியவை வருமாறு,

‘அக்கரபத்தனை பிளான்டேசன், தொழிலாளர்களை மிகவும் மோசமாக நடத்தியுள்ளது. ஈ.டிஎவ், ஈ.பி.எவ் போன்ற கட்டணங்களும் செலுத்தப்படாமல் உள்ளன. தொழிலாளர்கள் கூடுதல் கொழுந்து பறிக்க வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நாம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தோம். இதற்கு ஏனைய தொழிற்சங்கங்களின் தலைவர் மார் முழுமையான ஆதரவை வழங்கினர். அதற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தோட்டத் தொழிலாளர்களை நெருக்கடிக்குள் தள்ளாமல் வீட்டில் இருந்து போராடுமாறு நாம் அழைப்பு விடுத்தோம். மற்றையவர்கள் போல மக்களை வீதிக்கு இறக்கி கொரோனா பரப்பவில்லை. அப்படி இருந்தும் நாங்கள் நாடகமாடுவதாக சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமர்சிக்கின்றனர். அவர்களுக்கு பதிலடி கொடுக்க மாட்டோம். ஏனெனில் இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் விமர்சிப்பதில்லை என முடிவெடுத்துள்ளோம். மற்றையவர்களை தாக்கி பேசி, விமர்சனங்களை முன்வைப்பதற்காக மக்கள் எம்மை நாடாளுமன்றம் அனுப்புவும் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.




# மயில்தங்கியமலை நந்தீஸ்வரர் ஆலயத்தின் நாட்காட்டி வேளியீட்டு நிகழ்வு







மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள வாத்திரவெட்டை மயில்தங்கியமலை ஆதிபரமேஸ்வரி உடனுறை திருவருள்மிகு நந்தீஸ்வரர் ஆலயத்தின் 2022 ம் ஆண்டிற்கான நாட்காட்டி வெளியீட்டு விழா 19 12 2021 ஞாயிற்றுக்கிழமை வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலயத்தில் பிற்பகல் 03:30 மணியளவில் இடம் பெற்றது.

நந்தீஸ்வர ஆலயத்தின் நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் செந்தமிழ் ஆகம அருச்சுனையாளர்கள் அபிரொளிசிவம் சிவத்திரு வே.பிரபாகரன் சிவத்திரு ஜீ.தயாளன் ஆகியோர் பங்களிப்புடன் நடைபெற்ற நாட்காட்டி வெளியீட்டு நிகழ்வுக்கு தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் சிவத்திரு.சிவா ஐயா, மட்டக்களப்பு ஆதீனத்தின் நிறுவுனர் சிவத்திரு. ஜெயபால்ஐயா, நீர்முகப்பிள்ளையார் ஆலயத்தின் சிவஸ்ரீ.மா.ஜெயம்பலம் குருக்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியர் சிவத்திரு . ந.மௌலீசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு சேர்த்தனர்.

மேற்படி நிகழ்ச்சிக்கு சிவத்திரு .நல்லரெத்தினம் அவர்கள் தலைமை தாங்கி வரவேற்புரை உரை நிகழ்த்தி நிகழ்ச்சியினை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் ஆசி உரையினை ஆலய குருவான சிவஸ்ரீ மா.ஜெயம்பலம் குருக்கள் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் சிவத்திரு சிவா ஐயா சிறப்புரை வழங்கினார். இதனை அடுத்து ,நாட்காட்டி வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது.

நாட்காட்டிக்கான நிதியுதவியினை சுவிஸ் நாட்டில் வசிக்கும் திரு. சீ.கமலநாதன் அவர்கள் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Importas
Cash & Carry
Bern & Zürich

# மாபெரும்
# அதிரடி மலிவு விற்பனை

Offer From

## 18.12.2021 to 15.01.2022

## ஞாயிறு திறப்பு 19.12.2021

ஞாயிறு 19.12.2021 அன்று 10:00 மணி முதல் 19:00 மணி வரை
Importas பெர்ன் சூரிச் கடைகள் திறந்திருக்கும் .

Merry Christmas & HAPPY NEW YEAR

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார், புது வருட**
**தை திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்**

# ஈஸ்டர் தாக்குதலுடன் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு எந்தவொரு தொடர்பையும் நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை

## பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம் கூறுகிறது

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சட்ட விரோதமான கைது தொடர்பாக, பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம் (ஐகக்) ஏகமானதாக எடுத்துள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

உலகின் 179 தேசிய பாராளுமன்றங்கள் மற்றும் 13 பிராந்திய பாராளுமன்ற சபைகளினை அங்கத்துவமாகக் கொண்ட, தேசிய பாராளுமன்றங்களின் மிகப்பெரிய சர்வதேச அமைப்பாகிய பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் கைது மற்றும் தடுப்புக் காவல் தொடர்பாக விசாரணை நடாத்தி, அவ்விடயம் தொடர்பான தனது முடிவை வெளியிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ம் திகதி, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, மே மாதம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து, பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியமானது, குறித்த முறைப்பாட்டினை மிக தீவிரமாக விசாரணை நடாத்தியது.

கடந்த நவம்பர் 30, 2021 அன்று, ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடைபெற்ற பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியத்தின் 208 வது அமர்வில், இந்த விடயத்தின் மீதான முடிவு, ஒன்றியத்தின் ஆளும் குழுவால் ஏகமனதாக விவாதிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில், 'ஈஸ்டர் தாக்குதல்களுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்தார்' என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். ஆனால், இன்று வரையில் அது தொடர்பான எவ்வித ஆதாரங்களும் வெளிப்படுத்தப்படவில்லை. சினமன் கிராண்ட் ஹோட்டல் மீது தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட இன்ஷாப் அஹமட் என்பவருக்குச் சொந்தமான கொலஸியஸ் பிரைவட் லிமிட்டட் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ஏற்றுமதி உரிமத்தைப் பெற முயற்சித்ததாக குறிப்பிட்ட குற்றச்சாட்டு கூறுகிறது. பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் ரிஷாட் பதியுதீனுக்கு எந்தவொரு தொடர்பையும் நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இல்லை என, ஐகக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குறித்த ஒன்றியமானது, ரிஷாட் பதியுதீன் எம்.பி கைது செய்யப்பட்டதன் தன்மை, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் தன்மை மற்றும் குறித்த வழக்கில் தொடர்ச்சியாக ஏற்பட்ட முன்னேற்றங்கள் உட்பட பல காரணிகளை கவனத்தில் எடுத்தது.

ரிஷாட் பதியுதீன் எம்.பி சார்பாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை உடனடியாக பரிசீலிக்காத நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், அவர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக, ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

ரிஷாட் பதியுதீன் எம்.பி கைது செய்யப்பட்டு 06 மாதங்களுக்குப் பிறகு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட போதிலும், அவரை சந்தேக நபராக ஆக்குவதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதைக் காட்டுவதற்கான உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என ஒன்றியம் கவலை தெரிவித்துள்ளது. ஆகையால், இந்த விடயம் தொடர்பில், அவருக்கு எதிரான நம்பத்தகுந்த எந்தவொரு ஆதாரங்களும் எமக்கு கிடைக்கப்பெறாத காரணத்தினால், ரிஷாட் பதியுதீன் எம்.பி யின் முறைப்பாடு நியாயமானது என்றே நாம் கருதவேண்டியுள்ளது என்றும் ஒன்றியம் தெரிவித்துள்ளது

எனவே, ரிஷாட் பதியுதீன் எம்.பி யின் வழக்கை துரிதகதியில் விசாரித்து, அவருக்கு எதிரான நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பின், அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யுமாறும் அல்லது வழக்கிலிருந்து அவரை விடுவிக்குமாறும், மேற்படி விடயம் தொடர்பில் தமக்கு அறியத்தருமாறும், பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம், இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுக்கிறது என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வித திருத்தமோ அல்லது நீக்கமோ இன்றி, தற்போதைய வடிவிலினிலேயே இன்னும் செயல்பாட்டில் உள்ளது என்றும் குறித்த ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பு அமைப்புக்கள், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பல தடவைகள் கடுமையான அக்கறையினை வெளிப்படுத்தியுள்ளதுடன், இலங்கையிலுள்ள அதிகாரசபைகளும் அவ்வாறான திருத்தங்களுக்கு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்த போதிலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை திருத்தவோ அல்லது நீக்கவோ இதுவரை இலங்கையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்துவது அல்லது நீக்குவது தொடர்பில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தால், அது தொடர்பான எந்தவொரு நகர்வினையும் இலங்கை அரசாங்கம் தமக்கு அறிவிக்குமாறு குறித்த ஒன்றியம் வேண்டியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து ஏதேனும் நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருப்பின், அதுபற்றி தங்களிடம் தெரிவிக்குமாறும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

மேலும், பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியத்தின் ஆளுகை சபை, இந்த முடிவைப் பற்றி அனைத்து நாடாளுமன்ற மற்றும் ஃஓஅ%% எனக் குறிக்கப்பட்ட இந்த முடிவின் விசாரணை அதிகாரிகளுக்கும் தெரிவிக்குமாறும் அதன் செயலாளர் நாயகத்தை கோருகின்றது.

சர்வதேச பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியக் குழு, இந்த வழக்கை தொடர்ந்து கண்காணிப்பு செய்வதுடன், உரிய நேரத்தில் மேலதிக அறிக்கைகளினையும் வெளியிடும் என்பதையும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# அரசியலுக்கப்பால் நான் இல்லாவிட்டாலும் இலவச அமரர் ஊர்தி சேவை எமது மக்களுக்காகத் தொடரும்

## ஜி.கே அறக்கட்டளையின் தலைவர் பா.உ கோ.கருணாகரம் ஜனா

(சுமன்)

ஜி.கே அறக்கட்டளையின் இலவச அமரர் ஊர்தி சேவை அரசியலுக்காக ஆரம்பிக்கப்பட்டதல்ல சில காரணங்களினால் தடைப்பட்டதே தவிர நிறுத்தப்படவில்லை. என் அரசியல் முடிவுற்றாலும், நான் இல்லாவிட்டாலும் இச்சேவை எமது மக்களுக்காகத் தொடரும் என ஜி.கே அறக்கட்டளையின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.



ஜி.கே அறக்கட்டளையின் இலவச அமரர் ஊர்தி சேவையின் செயற்பாடு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2017ம் ஆண்டு எங்களது ஜி.கே அறக்கட்டளையூடாக ஆரம்பிக்கப்பட்ட இலவச அமரர் ஊர்தி சேவை தொடர்ச்சியாக 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரைக்கும் தனது சேவையைத் தொடர்ந்து சென்றது. சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சடலங்களை ஏற்றியுள்ளோம்.

மாநகரசபை வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எமது அமரர் ஊர்தி சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து சில சட்டப் பிரச்சனைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் பிற்பாடு அந்த ஊர்தி மீண்டும் புனரமைக்கப்பட்டு அந்தத் தடைகளெல்லாம் நீக்கப்பட்டு இன்று மீண்டும் மக்களின் சேவைக்காகத் தொடங்கப்படுகின்றது.

உண்மையில் இந்த இலவசச அமரர் ஊர்தி சேவையை நாங்கள் அரசியலுக்கு அப்பால் மனிதாபிமான ரீதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் எமது மாகாண மக்களுக்காகத் தொடங்கியிருந்தோம். அதனூடாக ஆயிரக் கணக்கானோர் பயன்பெற்றிருந்தார்கள்.

இருந்தும் இந்த அமரர் ஊர்தி சேவை தடைப்பட்டிருந்த காலத்தில் நாங்கள் இந்த அமரர் ஊர்தி சேவையை அரசியலுக்காகத் தான் தொடங்கினோம், பாராளுமன்றத் தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காகத் தான் தொடங்கினோம், தேர்தல் முடிந்து விட்டது அதனால் இந்த சேவையும் முடிந்து விட்டதெனப் பலரும் கூறியிருந்தாடகள்.

உண்மையில் அரசியலுக்கு அப்பால் தேர்தலுக்காக அல்லாமல் எனது பாராளுமன்றக் காலம் முடிந்த பிற்பாடும் எமது நிருவாகத்திலே இருக்கும் அத்தனை பேரும் இணைந்து எவர் ஒருவர் இல்லாவிட்டாலும், எனக்கே ஏதும் நடந்தால் கூட இந்த இலவச அமரர் ஊர்தி சேவை தொடரும். இது வசைபாடியவர்களுக்கும், இந்தச் சேவையின் மகத்துவத்தைப் புரிந்துகொண்டவர்களுக்குமான அறிவித்தல்.

இந்தச் சேவை தேவைப்படுபவர்கள் இன்றிலிருந்து இதில் குறிப்பிடப்பட்டுள்ள 0%66060299 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொண்டு இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்லாமல் கிழக்கு மாகாண மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம் என்று தெரிவித்தார்.

# யானை தாக்கியதில் ஒருவர் பலி



முஹம்மட் ஹாசில்

வவுனியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த இளைஞரொருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளதாக கெப்பித்திகொல்லவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (19) மாலை ஹொரவ் பொத்தான வவுனியா பிரதான வீதியின் அல்லவெவ மற்றும் நிக்கவெவ ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட காட்டுப்பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை பகுதியைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் மயூரன் (33வயது) எனவும் தெரியவருகின்றது. 69வது தேசிய பூப்பந்தாட்ட விளையாட்டு நிகழ்வு கொழும்பில் நடைபெற்று வருகின்ற நிலையில் இவர் அதன் நடுவராக செயற்பட்டு வந்துள்ளார்.

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி ரயிலில் வருகை தந்த அவர் மீண்டும் மோட்டார் சைக்கிளில் திருகோணமலை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது வீதியை கடக்க முற்பட்ட யானை இவரை தாக்கியதாகவும் தெரியவருகின்றது.

விசாரணைகளை கெப்பித்திகொல்லவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சக்தி பால் நிலையம் திறப்பு விழா





(அ.அச்சுதன் , சமிரா )

திருகோணமலை நகரத்தில் திருகோணமலை கூட்டுறவுச்சபை கட்டடத்தில் இயங்கி வரும் சக்தி பால் வியாபார நிலையம் கால்நடை வளங்கள், பண்ணை மேம்பபாடு பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண கால்நடை சுகாதாரத்திணைக்களத்தின் நிதி உதவித்திட்டத்தின் அடிப்படையில் வியாழக்கிழமை 12.30 மணிக்கு வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திருமதி .கலாமதி பத்மராஜா அவர்கள் கலந்து கொண்டு பெயர்பலகையினை திரை நீக்கம் செய்து சக்தி பால் வியாபார நிலையத்தினை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கால்நடை உற் பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப்பணிப்பாளர் திரு Dr. M.A.M Fazi மற் றும் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப்பணிப்பாளர் Dr S. Nizamdeen மற்றும் திருகோணமலை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி Dr R. Arunthavarasa மற்றும் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வியாபார நிலையத்தில் பாலினை கொள்வனவு செய்வோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இத்திறப்பு விழா வைபத்தினை திட்டத்தின் பயனாளிகளான சக்தி பால் வியாபார நிலையத்தின் உரிமையாளர் திருமதி காயத்திரி ரவிகாந்தன் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர் விருந்தினர்களை வரவேற்றதுடன் தனது நன்றியயும் தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் அவர் தனது தொழிலை கடந்து ஒன்பது வருடங்களுக்கு முன்னர் சிறியளவில் ஆரம்பித்ததாகவும் ; மெதுவாக முன்னேறி திருகோணமலை நகரில் அதிகாலை 4. 30 மணிக்கு தொடங்கி வீடுகளுக்கான பால் வினியோகத்தினை மேற்கொண்டதாகவும் தன்னால் 300 லீற்றர் பாலினை விற்பனை செய்ததாகவும் கடந்த இரண்டு வருடங்களாக பால் உற்பத்தி குறைவடைந்து தற்போது 60 லீற்றர் பாலினை மட்டுமே வியாபார நிலையத்தில் வைத்து விற்பனை செய்வதாகவம், இதனால் தனது தொழிலினை தொடர்ந்து நடத்துவது கஸ்ரமாக உள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் தற்போதய நாட்டில் நிலவும் பால்மா பற்றாக்குறை காரணமாக பசுப்பாலுக்கான பாவனையாளாகள் அதிகரித்துள்ளதாகவும் அதனை நிவர்த்தி செய்யமுடியாதுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் பால் உற்பத்தி தொழில் தொடாபாக தொழில்துறை திணைக்களத்தில் பயிற்சியினை உரிய முறைப்படி பெற்றுக்கொண்ட சான்றிதழினையும் காண்பித்தார்.

அதனை தொடர்ந்து சிறப்புரையாற்றிய செயலாளர் அவர்கள் இப்பயனாளியின் முயற்சியினை பாராட்டியதுடன் மக்களுக்கு சிறப்பான சேவையினை வழங்கி வருவதாக தெரிவித்தார். அத்துடன் இவருடைய வியாபார நிலையம் ஊடாக மக்களுக்கு தூய பசும்பாலை தொடர்ந்தும் விநியோகிப்பதற்காக பாலினை பெற் றுக்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை மாகாண கால்நடை திணைக்களம் மேற்கொள்ள வேண் டும் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் திட்டத்தினூடாக பயனாளிக்கு வழங்கப்பட்ட பொருட்களை பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து பேசிய மாகாண பணிப்பாளர் இப்பயனாளி தொடர்ந்தும் ஆர்வமாக செயற்படுவதை அவதானித்து திட்டத்திற்குள் இணைத்துக் கொண்டதாகவும் பல்வேறுஆலோசனைகளை தொடர்தும் வழங்கி வருவதாகவும் தெரிவத்ததுடன், திணைக்களம் ஊடாக கால்நடை வைத்திய அதிகாரியினூடாக இவரது பால் தேவையை பூர்த்திசெய்து வைக்க முடியம் என்று தெரிவித்தார்.

# கும்புறுபிட்டி நாவற்சோலை கிராமத்தில் மா மரக்கன்றுகள் வழங்கல்



(கதிரவன்)

பிரான்சில் வதியும் ஓம் அரி சிவசக்தி லக்ஷ்மி நாராயணர் ஆலய அறங்காவலர் மா.இ.பன்னீர்செல்வம் அவர்களால் மா மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகிறது.

கும்புறுபிட்டி நாவற்சோலை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு சனிக்கிழமை 2021.12.18 இவை வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த 14ம் திகதி தன் 58 வது அகவை நிறைவின் போது கன்னியா கிராமத்தில் 100 பயனாளிகளுக்கு இது போன்று வழங்கி வைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இவ்வாறு மா மர கன்றுகள் வழங்கப்பட உள்ளது.

ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் அ.சிவானந்தம் மற்றும் அவரது குழுவினர் இதனை பயனாளிகளுக்கு விநியோகம் செய்தனர்.




நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich
Poststrasse-5, 3400 Burgdorf
Tel: 0041 43 243 60 66 | 0041 79 940 15 10
ஆயுள்வேத மூலிகை வைத்தியம் மூலம் (கேரளா) சிகிச்சை அளிக்கப்படும். பழைய நோவாக இருந்தாலும் நாங்கள் பூரண குணமடைய வைக்கின்றோம். சுவிஸ் நாட்டில் உள்ளவர்கள் மருத்துவ காப்புறுதி மூலம் பணத்தைச் செலுத்தலாம். (Karankenkasse Anerkannt)
மேலதிகத் தொடர்புக்கு
Tel: 0041 43 243 60 66 | Whatsapp: 0041 79 940 15 10 (24 x 7)
www.aaranayurveda.ch


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL., CURRY GERICHTE,
PARTYSERVICE.
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# திருகோணமலை மாவட்ட
# தேர்தல் வன்முறை
# சம்பவ நிலை



**கா**லா காலம் தேர்தல் முறை என்பதும் தவிர்க்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது. தேர்தல் காலங்களில் அபேட்சகர்களை விளம்பரப்படுத்த முனைகின்ற போது சட்டத்துக்கு முரணாக மாற்றம் ஏற்படுகிறது இதனால் வன்முறை சம்பவங்கள் அதிகரிக்க காரணமாக அமைகிறது. திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பகுதியில் வயது 38 உடைய (பெயர் குறிப்பிட விரும்பாதத நபர் ) தனது வீட்டு பிரதான வீதியில் உள்ள மதிலில் கடந்த கால நாடாளுமன்ற தேர்தலில் சுவரொட்டி ஒட்டியது தொடர்பாக ‘நிறைய போஸ்டர்களை மதிலில் ஒட்டி விட்டு சென்றுட்டாங்க இரவில் இதனை அகற்றுவதும் கடினம்’ என கூறினார் பொலிஸார் அரசின் சட்ட திட்டத்துக்கு அமைய இதனை கறுப்பு நிற மையை கொண்டு அகற்றியதால் மதில் அசுத்தமடைந்ததாக தெரிவித்தார். நாட்டின் தேர்தல் சட்டம் இருந்தாலும் இதனை மீறி அபேட்சகர்கள் செயற்படுகிறார்கள் .

வன்முறைச் சம்பவங்களும் இதனால் பதிவாகிறது .திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் மூதூர் தொகுதி, திருகோணமலைத் தொகுதி, சேருவில தொகுதி என மூன்று தொகுதிகள் காணப்படுகிறது .இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டார்கள். இதில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் தேர்தல் காலத்தில் பதிவாகியது.அரச சொத்துக்களை பயன்படுத்தல்,கட்சிகளுக்கு இடையே சண்டை,பொது இடங்களில் விளம்பரப் பலகை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் பதிவாகிய நிலையில் தேர்தல் திணைக்களம் இதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகளும் சொல்லப்பட்டிருந்தது. பொலிஸாரின் பாதுகாப்பு உடனான இறுதி நேரத்தில் சுவரொட்டிகள் கறுப்பு நிற மைகளை கொண்டு அகற்றப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எது எப்படியாக இருந்தாலும் தேர்தல் காலங்களில் வன்முறைச் சம்பவங்கள் மறை முகமாக நடந்தேறிக் கொண்டே இருக்கின்றது.

சமூக ஆர்வலரான கிண்ணியாவை சேர்ந்த எம்.எம்.மஹ்தி அவர்கள் கருத்து தெரிவிக்கையில் ‘நாட்டின் தேர்தல் சட்ட திருத்தங்களில் மாற்றங்களை கொண்டு வரவேண்டும் சட்டத்தை மதிக்காது நடந்தால் உடன் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதே சிறந்தது என்றார். தங்கள் வாக்குகளை அதிகரிக்கவும் வன் முறைச் சம்பவங்கள் அதிகம் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைகிறது.

மூதூர் பகுதியினை சேர்ந்த பொது மகனான ஒருவர் வயது(49) இவ்வாறு குறிப்பிடுகிறார் கடந்த தேர்தல் காலத்தின் போது ‘எங்களுடைய வீட்டீ சுவரில் சமகிஜனபலய அபேட்சகரின் விருப்பு இலக்கம் சின்னம் என்பன வற்றை பெயின்டினால் வரைந்து சென்றதால் பொலிஸார் அதனை கறுப்பு நிற மையால் அகற்றியதால் அசுத்தமாக்கப்பட்டுள்ளது’ இவ்வாறு பொது மக்கள் சொத்துக்களையும் சேதப்படுத்துவது சாதாரணமாக தேர்தல் காலங்களில் வன்முறைகள் அதிகரிக்கிறது. திருகோணமலை மாவட்டத்தினை பொறுத்தமட்டில் அரசியல்கட்சிகள் சுயேட்சை குழுக்கள் என அபேட்சகர்களாக களமிறங்கியது மக்களின் விருப்பு வாக்குகளை பெறுவதற்காக அரசியல் கட்சிகள் சுயேட்சை குழு அபேட்சகர்கள் பல்வேறு விதமான பிரயத்தனங்களை மேற்கொண்டார்கள்.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில் கடந்த கால தேர்தல்களின் போது சில வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 2019 நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போதும் சில சம்பவங்கள் பதிவாகிய நிலையில் உள்ளன. எட்டாவது ஜனாதிபதி தேர்தலின் போது மொத்தமாக 15,992,096 வாக்குகள் பதியப்பட்டிருந்த நிலையில் 13,387,951(83.72)வீதமான வாக்களிப்பு இடம் பெற்றுள்ளது.தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) தேர்தல் அவதானிப்பு அறிக்கையின் படி திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலுக்கு முன்னர் ஆறு சம்பவங்கள் பதிவாகியுள்ளது. தாக்குதல் சம்பவம் 01,அரச வாகனங்கள் முறைகேடாக பாவித்தமை 03, தீக்கிரையாக்கல் 01, அரச அதிகாரியின் பகிரங்க அரசியல் ஈடுபாடு01 என வன் முறைகள் பதிவாகியுள்ளது

மேலும் சிறிய சம்பவங்களாக சட்ட முரணான பிரச்சாரம் 01,சட்ட முரணான சுவரொட்டிகள் பதாகைகள் 03,தேர்தல் குற்றங்கள் 05 என ஒன்பது சம்பவங்கள் இணங் காணப்பட்டன. குறிப்பாக வன்முறைச் சம்பவக்களாக தாக்குதல் ,இலஞ்சம், சட்ட முரணான பிரச்சாரம், முரணான சுவரொட்டிகள்,



ஹஸ்பர் ஏ ஹலீம்

அச்சுறுத்தல்,பொருட்களை பகிர்தல் உள்ளிட்ட பல குற்றங்கள் தேர்தல் காலங்களில் தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் தினத்தன்றும் வாக்களிப்பு முடிவுகளை அறிவித்த பின்மும் சம்பவங்கள் பதிவாகின்றன. தேர்தலுக்கு பின்னரான காலத்தில் ஆதனச் சேதம் ஒரு சம்பவமாக இடம் பெற்றுள்ளது. இது தவிர 2020 பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போதும் கூட வன் முறை இடம் பெற்றுள்ளதை மேலும் குறித்த நிலையம் அறிக்கையூடாக சுட்டிக் காட்டியுள்ளது. தேர்தலுக்கு முன்னர் 57 சம்பவங்களும் , தேர்தல் தினத்தன்று 08 சம்பவங்களும் பதிவாகியுள்ளது.

தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் கெபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மகீன் அவர்களிடம் வினவிய போது ‘தேர்தல் கால வன்முறை சம்பவங்கள் இடம் பெறுவதற்கு பிரதான காரணம் போட்டித் தன்மையே மற்றும் விருப்பு வாக்கு முறை ஆகும். அபேட்சகர்கள் தங்களது ஆதரவுகளையும் செல்வாக்குகளையும் கூட்டுவதற்காக இவ்வாறான சம்பவ நிலை ஏற்படுகிறது ’ என தெரிவித்தார்.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 2020ல் இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது மொத்தமாக (24.07.2020) வரை 101 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக உதவி தெரிவத்தாட்சி அலுவலக தகவல்கள் தெரிவிக்கிறது இதில் 68 முறைப்பாடுகளை பொலிஸாருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதில் சிறிய அளவிலான முறைப்பாடுகளே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதனை பொலிஸார் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது அரச சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைக்காக பயன்படுத்தல் உள்ளிட்ட சிறியரக முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் எழுத்துருவில் மட்டுமே உள்ளது இதனை நடைமுறைப்படுத்துவது போதாதது புதிய வேட்பாளர் அறிமுகம் என்பது மிகவும் கஷ்டமாகவுள்ளது ஒவ்வொருவருங்கும் ஒவ்வொரு சட்டம் உள்ளது இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.சட்டத்தை பாதுகாக்க காவல் துறையினர் ,உரிய தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு போதிய தெளிவின்மை உள்ளது.ஆளுங்கட்சி டெலிபோன் கட்சிகள் இறுதி நேரத்தில் மக்களுக்கு பணம் கொடுத்து வாக்குகளை சூறையாட நினைக்கிறார்கள்.தான் சுவரொட்டிகளை பெரியளவில் பயன்படுத்தவில்லை சட்டத்தை மதிக்கிறேன் வன் முறைகளை தடுக்கவே வழிசமைக்கிறோம்.எந்தவொரு இடையூறும் இல்லாமல் மக்களுக்கு இடைஞ்சல் அல்லாத வகையில் பிரச்சார பணிகள் முன்னெடுக்கப்படுகிறது என தேசிய விடுதலை மக்கள் முண்ணனியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்தார்.



ஜனநாயக முறையான தேர்தல் இடம் பெற வேண்டும் என பேசப்பட்டாலும் கூட அது நடை முறையில் சாத்தியமாகுவதில்லை .தேர்தல் காலங்களில் வன் முறை சம்பவங்கள் தொடர்பில் அதனை அவதானிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் காணப்படுகின்றன இது தவிர சர்வதேச கண்காணிப்பாளர்களும் களமிறக்கப்படுகிறார்கள். இலங்கையில் விகிதாசார தேர்தல் முறையும் காணப்படுகிறது இது தொடர்பில் தேர்தல் சட்டங்கள் தேர்தல் முறைகள் மறுசீரமைப்பு தொடர்பில் நிபுணர்கள் குழு அண்மையில் நியமிக்கப்பட்டது . ஒரு ஜனநாயக நாட்டில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடாக்க தேர்தல் முறைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்படவேண்டும் அப்போது தான் வன்முறையற்ற தேர்தலாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை .

தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக திருகோணமலை தேர்தல்கள் அலுவலகத்துக்கு கோரப்பட்ட 2019 ஜனாதிபதி தேர்தல் தொடர்பான வர்முறைச் சம்பவங்களின் பிரகாரம் வன்முறைகள் 2, தேர்தல் சட்டத்தை மீறியமை 57, ஏனையவை 21 மொத்தமாக 80 சம்பவங்கள் பதிவாகியதாகபிரதி தேர்தல்கள் ஆணையாளர் (கிழக்கு மாகாணம்) எஸ்.சுதாகரன் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இச்சம்பவங்கள் தொடர்பில் சுமார் மூன்று மாதங்களுக்கு பின்னரே தபால் மூலமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் தகவல் கிடைக்கப் பெற்றது.

எது எப்படியாக இருந்தாலும் தேர்தல் முறையில் மாற்றங்களை கொண்டு வருவதன் ஊடாக வன்முறை சம்பவங்களை குறைப்பது தொடர்பாக எதிர்பார்க்கப்பட்டாலும் காலத்துக்கு ஏற்ற வகையில் அவ்வப்போது சம்பவங்கள் நிகழ்வது வழமையாகி விட்டது.

ஜனாதிபதி தேர்தல்,நாடாளுமன்றத் தேர்தல் ,மாகாண சபை தேர்தல்,உள்ளூராட்சிமன்ற தேர்தல் என பல தேர்தல்கள் காலா காலம் நடாத்தப்பட்டு ஆட்சி இடம் பெறுகிறது. விகிதாசார தேர்தல் முறை எதிர்காலத்தில் மாகாண சபைக்காக நடை பெறுமா என வாதப் பிரதிவாதங்களும் நிலவுகின்றன. அதே போன்று தான் வட்டார முறையும் கடந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போது அமுலில் இருந்து வருகிறது ஒட்டு மொத்தமாக வன்முறைகளை தூண்டுவதாக தேர்தல் காலங்களில் காணப்படுகிறது . அபேட்சகர்கள் தங்களது வாக்குகளை அதிகரிப்பதற்காக தேர்தலின் போது பணம், மதுபானம் உள்ளிட்ட பல பொருட்களை வழங்கி தங்களை தாங்களே பலப்படுத்த முயற்சிக்கின்றனர். இதனால் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

புதிய தேர்தல் முறை மாற்றங்கள் இந்த அரசாங்கம் மூலம் கொண்டு வரப்பட்டாலும் அது தேர்தல் காலத்தின் போது தேர்தலுக்கு முன்னும் அதன் பிற்பாடும் வன்முறைக்கு தூண்டுமா ? என்பதிலும் சந்தேகம் எழுகின்றது.





# 'கிழக்கின் அவிழ்தம்' சஞ்சிகை வெளியீடு!



















**(பைஷல் இஸ்மாயில்)**

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகை சிறப்பு மலர் வெளியீட்டு விழா 15 ஆம் திகதி கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஶ்ரீதர் தலைமையில் கிழக்கு மாகாண முதலமைச்சின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ், கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான வைத்தியர் வி.அனவரதன், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளரும் புதுக்குடியிருப்பு தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான (திருமதி) பாஸ்கரன் ஜெயலட்சுமி, கல்முனை பிராந்திய இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், திருகோணமலை பிராந்திய இணைப்பாளரும், மேற்பார்வை சமூகநல மருத்துவ வைத்தியருமான சி.சிவச்செல்வன், திருகோணமலை - கப்பல்துறை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அன்ரன் அனெஸ்றீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சஞ்சிகை வெளியீட்டு உரையை கல்முனை பிராந்திய இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபிலினாலும், சஞ்சிகை நயவுரையை கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்தியர் வி.அனவரதன் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டது.

நாட்டின் அசாதாரன சூழ்நிலையை கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வைத்திய பொறுப்பதிகாரிகள் மற்றும் கிழக்கின் அவிழ்தம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கிய வைத்தியர்கள் ஆகியோர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனைக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் விஜயம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் சிஹான்)

சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர். எஸ்.எச்.முனசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். அசல குணவர்தன உள்ளிட்ட உயர் அதிகாரிகள் நேற்று கல்முனைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு விஜயம் செய்த இவர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் சேவைகள் குறித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது கல்முனை இப்பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள (இணிதிடிஞீ - 19) கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை, பொதுச் சுகாதார செயல்பாடுகள், டெங்கு தொற்று நோய், தொற்றா நோயின் தாக்கம் உட்பட பிராந்தியத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சுகாதார சேவைகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் தேவைகள் குறித்தும் பணிப்பாளர் டொக்டர்.குணசிங்கம் சுகுணன் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

சுகாதார அமைச்சின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படும் இலத்திரனியல் ஆவண காப்பு, தரவு சேமிப்பு முறைமையை அமைச்சின் செயலாளர் இங்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுகாதார சேவைகளை பாராட்டி பேசிய உயர் அதிகாரிகள் கொவிட் தொற்று நோய் காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் அன்மையில் வெளியீட்டு வைக்கப்பட்ட 'அரண்' சஞ்சிகையின் பிரதிகளும் அதிகாரிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டதுடன். தேசிய உற்பத்தி திறன் விருதினை வெற்றிகொண்ட சம்மாந்துறை வைத்தியசாலைக்குரிய விருதும் இங்கு வழங்கி வைக்கப்பட்டன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர். அசேல குணவர்தன, சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர். எஸ்.எச் முனசிங்க உள்ளிட்டவர்களின் சேவைகளை பாராட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஞாபகச் சின்னங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஏ.எச். எம்.அன்சார், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் .ஏ.ஆர் எம். தௌபீக், கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எம்.பி. அப்துல் வாஜித் உட்பட பிராந்திய வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



நிகழ்வின்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட பிரிவின் கீழ் சிறந்த திறமைகளை வெளிக்காட்டிய உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# புளியந்தீவில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாம் கட்ட கோவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம்





(சுமன்)

30 வயதுக்கு மேற்பட்டோருக்கான மூன்றாம் கட்ட கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் புளியந்தீவு பகுதியில் வசிக்கும் 30 வயக்கு மேற்பட்டடோருக்கான பைசர் தடுப்பூசி வழங்கும் செற்திட்டம் இன்றைய தினம் மட்ஃவின்சன் உயர்தர தேசியப் பாடசாலை மண்டபத்தில் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது.

புளியந்திவு தெற்கு, புளியந்திவு கிழக்கு, புளியந்தீவு மேற்கு, புளியந்தீவு மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதன்போது வருகை தந்து தங்களுக்கான மூன்றாம் கட் தடுப்பூசியினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பு





(எப்.முபாரக் )

திருகோணமலை கந்தளாய் பிரதேச சபைக்குட்பட்ட திருகோணலை கண்டி பிரதான வீதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பிரயாணிகள் கவலை தெரிவிக்கிறார்கள் .

இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் கந்தளாய் மணிக்கூட்டு கோபுரத்தின் முன்னாள் இவ்வாறு நடமாடுவதால் போக்குவரத்துக்கு இடையூர் செய்வதாகவும் வாகன விபத்தும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

அத்தோடு வீதியை மறித்துக்கொண்டு கட்டாக்காலி மாடுகள் செல்வதனால் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.ஒளி சமிக்கைகளை வெளிக்காட்டியும் கட்டாக்காலி மாடுகள் நகர்வதில்லை எனவும் முறையிடுகின்றனர்.அண்மையில் கந்தளாய் நகரில் இரவு வேளையில் கட்டாக்காலி மாகளுடன் மோதுண்ட ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளான சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் கந்தளாய் பிரதேச சபை தவிசாளரிடம் தெரியப்படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையெனவும் முறையிடுகின்றனர். பாரிய உயிர்ச்சேதம் மற்றும் விளைவுகள் ஏற்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

# கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர்கள் சபைக்கு புதிய பணிப்பாளர்களுள் ஒருவராக நாஸிறூன் நியமனம்

(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர்கள் சபையின் பணிப்பாளர் உறுப்பினராக, நிந்தவூரைச் சேர்ந்த எஸ்.எல்.எம். நாஸிறூன், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால், கடந்த புதன்கிழமை (15) நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறை விரிவுரையாளரான இவர், கிழக்கு மாகாண ஆளுனரின் மாகாண சுதேச மருத்துவ மேம்பாட்டு விஷேட ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவரும்,



ஜனாதிபதியின் வியத்மக அமைப்பின் அம்பாறை பிராந்திய உறுப்பினருமாவார்.

# மூதூர் மத்திய கல்லூரியின் முன்னால் பிரதி அதிபர் எம்.எஸ்.எம்.பிஸ்ரி கல்விச் சேவையில் 27 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி விட்டு தனது 55 வயதில் ஓய்வு

(எப்.முபாரக்)

மூதூர் மத்திய கல்லூரியின் முன்னால் பிரதி அதிபர் எம்.எஸ்.எம்.பிஸ்ரி கல்விச் சேவையில் 27 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி விட்டு தனது 55 வயதில் ஓய்வு பெற்றதையடுத்து மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) கல்லூரி



அதிபர் எஸ்.ஏ.முஹிர் தலைமையில் நடாத்திய சேவை நலன் கௌரவிப்பு நிகழ்வில்

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் மூதூர் கிளையின் பொதுச் செயலாளர் ஏ.எம். ரஹீம் (ஆசிரியர்) அவரின் சேவை நலனைப் பாராட்டி நினைவுப் பரிசு ஒன்று வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# படைப்புழுவைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிப்பு

(ரக்ஸனா)

படைப்புழுவைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிப்பு.

சோளன் செய்கையில் தற்போது படைப்புழுவின் தாக்கம் அதிகரித்து வருகின்ற இந்நிலையில் புடைப்புழுத் தாக்கம் தொடர்பிலும், அதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும், விவசாயிகளுக்கு விழக்கமளிக்கும் விழிப்புணர்வு நிகழ்வொன்று மட்டக்களப்பு மாவட்டம் தாந்தாமலை, மக்களடியூற்று, மற்றும் பனிச்சையடிமுன்மாரி, ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை (19) நடைபெற்றது.





மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ரி.மேகராசா, தாந்தாமலை விவசாயப் போதனாசிரியார், ரி.சுரேஸ், பாடவிதான உத்தியோகஸ்த்தர் என்.லக்ஸமன், தொழில்நுட்ப பாடவிதான உத்தியோகஸ்த்தர், மற்றும் கமநல கேந்திர நிலைய உத்தியோகஸ்த்தர், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விளக்கங்களை வழங்கினர்.

தாந்தாமலை பகுதியில் சுமார் 150 இற்கு மேற்பட்ட ஏக்கரில் சோளன் செய்கை பண்ணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பில் சிறு கைத்தோழில் முயற்சியாளர்களின் உற்பத்திச் சந்தை டிஜிடல் கோடுப்பணவுமுறையூடன் ஆரம்பம்







மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்கு டிஜிடல் கொடுப்பனவு முறையுடனான சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்பாய ராஜபக்சவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் ஓர் அம்சமான டிஜிடலைஸ் எகொனொமி எனும் வேலைத்திட்டத்தின்கீழ் தொடுகை முறையற்ற கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டினூடான பணப்பரிமாற்ற சேவையினை சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஹட்டன் நசனல் வங்கி சனிக்கிழமை மட்டக்களப்பில் அறிமுகம் செய்துவைத்தது.

கையடக்கத் தொலைபேசியூடாக இயங்கும் விசேட செயலியான சோலோ எனும் அப்பினூடாக மட்டக்ளப்பு மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை விற்பனை செய்யவும், நுகர்வோர் அதனைக் கொள்வனவு அசய்ய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்தினால் பிரதம அதிதயாகக் கலந்து கொண்டு நத்தார் சந்தையினைத் திறந்து வைத்ததுடன் சோலோ செலியினூடாக உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் நடைமுறையினையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ. வாசுதேவன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி. உதயராணி யுகேந்திரன், ஹட்டன் நெசனல் வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளர் என். கேதீஸ்வரன், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் எம். ஐ. உவைஸ், வங்கியின் உயர் அதிகாரிகளான என். சத்தியசீலன், கே. திலகேசன், மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மேற்பார்வையாளர் வினோத் உள்ளிட்ட வங்கியின் உத்தியோகத்தர்கள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# திருகோணமலையில் ஆட்சதோன் பயிற்சிப் பட்டறை

(வடமலை ராஜ்குமார்)

பிரிடிஸ் கவுன்சில் எஸ்.ஆர்.பி. திட்டத்தின் மூலம் கலைகளின் ஊடாக நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்திட்டத்தின் ஆட்சதோன் பயிற்சிப் பட்டறை திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியில் இடம் பெற்றது. கடந்த 08,09,10 ஆகிய மூன்று தினங்கள் இப்பயிற்சி இடம்பெற்றது.

பிரிடிஸ் கவுன்சிலின் இலங்கையில் நல்லிணக்கத்தை செயல்முறையினை வலுப்படுத்தும் திட்டத்தின் திட்ட பணிப்பாளர் சின்னத்தம்பி விஜயபால மற்றும் பிரிடிஸ் கவுன்சிலில் தகவல் தொடர்பு இயக்குனர் லூயிஸ் கவ்ச்சர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இத் திட்டத்தின் ஆறாவது ஆட்சதோன் பயிற்சி பட்டறையாக நடைபெற்ற இந்தப் பயிற்சியில் திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாரை முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 03 கலைஞர்கள் கலந்து கொண்டிருந்தனர்.






# தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான விழிப்புணர்வு





எமது Lift Ngo நிறுவனத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்தப்படும் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

Transparency International Sri Lanka நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இவ் வேலைத்திட்டம்

ஊழலற்ற எதிர்கால சமுதாயம் எனும் தூரநோக்கைக் கொண்டதாகும்.

இதற்கமைய மட்டக்களப்பு மற்றும் ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களில் தகவல் அறியும் உரிமை தொடர்பான இரண்டு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

எமது நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி. ஜானு முரளிதரன் அவர்களது தலைமையிலும், எமது திட்ட உத்தியோகத்தர் திரு. தயாநிதி அவர்களது ஏற்பாட்டிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் Transparency International Sri Lanka நிறுவனத்தின் சமூகத்துறைக்கான கிளைத்தலைவர் திரு. கௌரீஸ்வரன், மற்றும் சிரேஸ்ட திட்ட உத்தியோகத்தர் திருமதி. பிரியா போல்ராஜ் ஆகியோர் வளவாளர்களாக பங்குபற்றினர்.

# குளோபல் வன் நிறுவனத்தினால் குச்சவேளி பிரதேசத்தில் வீடமைப்பு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டுவிழா!







(சமிரா)

அநாதைகள் மற்றும் பாதிக்கப்பட்ட வறிய சிறார்களின் குடும்பங்களுக்கான 25 நிரந்தர வீடுகளை 2022 இல் அமைக்கும் குளோபல் நிறுவனத்தின் செயற்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பென்னி அப்பீல் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் நிதியுதவியுடன் இரு மாதிரி வீடுகளை அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் குச்சவெளி பிரதேச செயலக செந்தூர் கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது. இந் நிகழ்வு குளோபல் வன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பளர் திரு. எம்.எம். அன்சாரி, மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் திரு. கு. குணநாதன் அவர்களின் தலைமைய உத்தியோகபூர்வமாக அடிக்கல் நாட்டி ஆரம்பிக்கப்பட்டது.

இவ் வைபவத்தில் திரியாய் வட்டார உறுப்பினர் திரு. வ.மு. ரிசாத், சர்வ மதத் தலைவர்கள், மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# பேசாலையில் இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டு பாரிய சிரமதானம்

(வாஸ் கூஞ்ஞ)





மன்னார் மாவட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் ஒரு கிராமமாக விளங்கும் பேசாலை பகுதியில் டெங்கு நோய் தீவிர பிரதேசமாக காணப்படுவதாக சுகாதார பகுதினரால் அடையாளமிடப்பட்டதைத் தொடர்ந்து இவ் கிராமத்தில் இயல்பு வாழ்க்கை முடக்கப்பட்டு பாரிய சிரமதான பணிகள் இடம்பெற்றன.

இவ் நிகழ்வின் இரண்டாவது சிரதான பணி சனிக்கிழமை இடம்பெற்றது.

அன்மையில் மன்னார் பகுதியில் பெய்த மழையினால் என்றும் இல்லாதவாறு இவ் பேசாலை பகுதி வெள்ளத்தினால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றது.

இதன் காரணமாக இப் பகுதியில் தொடர்ந்து வீடுகளும் மற்றும் பல இடங்களில் வெள்ளநீர் வற்றாத நிலையிலேயே காணப்பட்டு வருகின்றன.

இதன்நிமித்தம் இவ் கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை டெங்கு நோய்களுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்கு உள்ளாகி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் டெங்கு நோயிலிருந்து மக்களை காப்பாற்றும் நோக்குடன் சனிக்கிழமை (18.12.2021) பேசாலையில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இப் பகுதியிலள்ள சகல வர்த்தக நிலையங்கள் இவ் ஊரிலிருந்து மேற்கொள்ளப்படும் போக்குவரத்து சேவைகள் மீனவர்கள் கடலுக்குச் செல்லுதல் போன்ற அனைத்து செயல்பாடுகளும் முடக்கப்பட்டு இவ் பொது சிரமதான பணிகள் இடம்பெற்றது.

பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கு தந்தை ஏ.ஞாணப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற ஆலய மேய்ப்புப்பணி மற்றும் இவ் கிராமத்திலுள்ள சகல அமைப்புக்களின் ஏற்பாட்டிலேயே இவ் சிரமாதன பணி இடம்பெற்றது. ஒரு வாரத்துக்குள் இங்கு மேற்கொள்ளப்பட்ட பாரிய சிரமான பணியானது இது இரண்டாவதாகும் என்பதும் குறிப்படத்தக்கது.

# அடுத்த வருடம் முதல் அனைத்து பிரதேச செயலாளகங்களிலும் உதவி தகவல் உத்தியோகத்தர் நியமனம்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)





அரச வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் பட்டதாரி பயிலுனர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் அடுத்த வருடம் நிரந்தரமாக்கப்பட்ட பின்னர் அனைத்து பிரதேச செயலகங்களிலும் உதவி தகவல் உத்தியோகத்தர் ஒருவர் என்றடிப்படையில் 340 பேர் நியமிக்கப்பட உள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார் .

பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அப்பிரதேசங்களில் காணப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை சரியான முறையில் பெற்றுக் கொண்டு அவற்றை மக்கள் அறியும் நோக்கில் அறிக்கையிடல் இவர்களுடைய நியமனம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதேச ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பல பிரதான பிரதான ஊடகங்கள் பலவற்றின் கவனத்திற்கு தென்படாமல் காணப்படுகின்றது. அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் குறித்த உத்தியோகத்தர்கள் மூலம் சரியான முறையில் தகவல்களை பெற்றுக்கொண்டு அவற்றை தேசிய ரீதியாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

இதன் மூலம் மக்களுக்கு குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களின முக்கியத்துவம் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை அறியும் வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 22 வருடம் நிறைவு பெற்றுள்ளதனை முன்னிட்டு மாவட்ட ஊடகப்பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கண்டியில் நடைபெற்ற விசேட பயிற்சி செயலமர்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாவட்ட ஊடகப்பிரிவை வலுப்படுத்தும் நோக்கில் 10 புகைப்பட கருவிகள் 10 மாவட்ட ஊடகப்பிரிவுகளுக்கு இதன் போது அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (ஊடகம்) மிலிந்த ராஜபக்ச, மேலதிகப் பணிப்பாளர் நாயகம்(நிர்வாகம்) லேகா பதிரன, உதவிப் பணிப்பாளர் எல்.பி .திலகரத்ன, உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# வீதியில் கண்டெடுத்த பெறுமதியான தங்க நகைகளை மீள ஒப்படைத்த இளைஞனுக்கு பாராட்டு



(த.சுபேசன்)

யாழ்ப்பாணம்-அரியாலைப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் தவறவிடப்பட்ட 40இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைப் பையை மீளவும் உரியவரிடம் சென்றடைய வழிவகுத்த தென்மராட்சி இளைஞனுக்கு 15/12 புதன்கிழமை காலை வடவரணி கந்தசுவாமி ஆலய முன்றலில் வைத்து கௌரவமளிக்கப்பட்டது.

தென்மராட்சி - வரணி பகுதியைச் சேர்ந்த 21வயதான சியானீஸ் மதுசன் என்ற இளைஞனே இந்த நல்ல காரியத்தில் ஈடுபட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். கௌரவிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மதுசனை கௌரவித்திருந்தனர்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் 6.5 கிலோ மீற்றர் யானை வேலி அமைக்க நடவடிக்கை

(எச்.எம்.எம்.பர்ஸான்)



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மஜ்மா நகரில் 6.5 கிலோ மீற்றர் யானை வேலி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஏ.எல்.சமீம் தெரிவித்தார்.

மஜ்மா நகர் கிராமத்திற்குள் தினந்தோறும் கூட்டமாக வரும் யானைகள் அங்குள்ள வேளாண்மைகளையும், குடியிருப்புக்களையும் துவம்சம் செய்து வருகின்றன.

இவ்வாறு துவம்சம் செய்து வரும் யானைகளை கட்டுப்படுத்த கிராம அபிவிருத்தி சங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.

இந்நிலையில், குறித்த பகுதிக்கு 6.5 கிலோ மீற்றர் யானை வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்காக வேண்டி வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் சனிக்கிழமை (18) மஜ்மா நகர் பகுதிக்கு வருகை தந்து குறித்த இடத்தை பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் பைசிக்கிள்களை திருடிய பலநாள் திருடன் பிடிபட்டான்! போதுமக்கள் கட்டிவைத்து காரைதீவுப் போலிசில் ஒப்படைப்பு!

(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)



பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான் என்பதற்கிணங்க கடந்த காலங்களில் சுமார் பத்து துவிச்சக்கரவண்டிகளை களவாடி வந்த ஒரு திருடன் நேற்று பைசிக்கிள்ஒன்றை திருடும்போது னையும் மெய்யுமாக பிடிப்பட்டான்.

பைசிக்களை திருடும்போது ஆலய பாதுகாவலர் திடிரென பிடிக்களத்தனித்த போது ஓடமுயன்றுள்ளார். ஓடிச்சென்று அவனைப்பிடித்தார். அங்கு குழுமியிருந்த பொதுமக்கள் கள்ளனை மரத்தில் கட்டி வைத்து தர்மஅடி வழங்கினர்.

இச்சம்பவம் காரைதீவில் நேற்றுமுன் தினம் காலைவேளையில் இடம்பெற்றது.

காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு முன்பு உள்ள வாகனத்தரிப்பிடத்தில் தனியார் வகுப்பிற்கு செல்லும் மாணவர்கள் துவிச்சக்கரவண்டியை வைத்து விட்டு கல்முனை தனியார்வகுப்பிற்கு செல்வது வழமை.

இதனை அறிந்த திருடன் பலநாட்களாக துவிச்சக்கரவண்டியை திருடிவந்துள்ளான். நேற்றுமுன்தினம் திருடும்போது அவர் வகையாக மாட்டியுள்ளார். தர்மஅடியின் பின்னர் காரைதீவுப் பொலிசாரிடம் திருடனை பொதுமக்கள் ஒப்படைத்தனர்.

# கல்முனையில் பாதுகாப்பு படையினருக்கான அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வுக் கூட்டம்

(நூருள் ஹுதா உமர், றாஸிக் நபாயிஸ், எம்.என்.எம்.அப்ராஸ்)





பாதுகாப்பு படையினருக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு கூட்டம் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸின் ஒருங்கிணைப்பில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (18) நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலக கணக்காளர்கள், யூ.எல். எம். ஜவாஹிர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜெளபர், அனர்த்த நிவாரண அபிவிருத்தி உத்தியோகத்தர்களான றாசிக் நபாயிஸ், எம்.என். பஸ்மிலா,

பொலிஸார், கடற்படை அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகள், உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில், வட கீழ் பருவ பெயர்ச்சி மழைக்கு முதல் அனர்த்த முன் ஆயத்த திட்டங்கள் தொடர்பாகவும், வெள்ள நீர் தேங்கும் இடங்களை அகற்றுவது, அனர்த்த தயார்படுத்தலை செய்வது, பாதுகாப்பு படையினர் மட்டத்தில் அனர்த்த குழுக்களை வலுப்படுத்தல் , முன்னெச்சரிக்கை பொறிமுறைகளை விருத்தி செய்தல், வெள்ளம், சூறாவளி அனர்த்தங்கள் ஏற்படும் போது எவ்வாறு நடந்து கொள்ளல் தொடர்பாகவும் மற்றும் நலன்புரி இடங்களின் விஸ்தரிப்பு , அவசர உதவி பொருட்கள், 24 மணி நேரமும் இயங்கும் அவசர கால கட்டுப்பாட்டு அறை செயற்பாடுகள், வெள்ள அனர்த்த திட்டங்கள், அனர்த்த நிலையின் போது மேற்கொள்ள வேண்டிய முதலுதவி தொடர்பாகவும், பாதிக்கப்பட்டவர்களை தேடிப் பாதுகாத்தல் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் மேலும் அனர்த்த நிலை தொடர்பிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டது.

# 13 வது திருத்தம் தமிழர்களுக்கு எந்தப் பாதுகாப்பையும் வழங்கவில்லை

13வது திருத்தம் தமிழர்களுக்கு எந்தப் பாதுகாப்பையும் வழங்கவில்லை என வவுனியாவில் கடந்த 1%6% வது நாளாக தொடர் போராட்டத்தினை முன்னெடுத்துள்ள தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், கடந்த 74 வருடங்களாக ஒற்றையாட்சி அரசில், தமிழர்கள் பல உரிமைகளை இழந்தனர் மற்றும் ஒரு அரசியல் ஆதாயம் பெறவில்லை. ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையுடன் யுத்தம் மற்றும் இனப்படுகொலையின் தொடர்ச்சியின் பின்னர், தமிழர்கள் வடக்கு கிழக்கில் ஒரு தமிழ் இனமாக வாழ்வதற்கு மூன்று அடிப்படை கட்டமைப்புகள் தேவை.

பாதுகாப்பான தாயகம் வேண்டும், கொலைகள், கடத்தல், பயங்கரவாதச் சட்டம், நில அபகரிப்பு, தமிழர்களின் கலாச்சாரத்தைச் சீரழிப்பு போன்றவற்றிலிருந்து தமிழர்களுக்குப் பாதுகாப்பு தேவை. உளவுத்துறையினரால் ஆதரிக்கப்படும் போதைப்பொருள் மற்றும் கும்பல் வன்முறையில் இருந்து எங்கள் இளைய தலைமுறையைக் காப்பாற்ற வேண்டும்.

அத்துடன் தமிழர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட தாயகம் வேண்டும். சிங்களவர்களிடமிருந்து நமது வடக்கு கிழக்குப் பாதுகாக்கப்பட வேண்டும், கொடூரமான இராணுவத்துடன் எங்கள் நிலத்தைக் கைப்பற்றி, அவர்களின் சொந்த வரலாற்றின் பொய்யான அல்லது சூழ்ச்சியின் பெயரால், சிங்களப் புத்திஜீவிகளின் பௌத்த அடிப்படை வாத பயங்கரவாதத்தை நிறுத்த வேண்டும்.

திரும்ப பெறமுடியாத அரசியல் தீர்வு, சிங்கள அரசால் பறிக்க முடியாத அரசியல் தீர்வு தமிழர்களுக்குத் தேவை. எமது அரசியல் உரிமைகள் பலவற்றை இலங்கை பறித்ததை நாம் பார்த்திருக்கின்றோம்.

உதாரணமாக, 1944 இல், சோல்பரி அரசியலமைப்பின் 29 (2) வது சரத்தின் மூலம் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு ஒரு அரசியலமைப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டது, 1972 இலங்கை அரசியலமைப்பிலிருந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் தமிழர்களுக்கான அரசியலமைப்பு பாதுகாப்பு அழிக்கப்பட்டது.

13 திருத்தத்தின்படி, இலங்கை வடக்கு கிழக்கு இணைப்பு, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நிராகரித்தது. பல பாடசாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பல நிறுவனங்கள் கொழும்பு அரசாங்கத்தால் மாகாண சபையிடமிருந்து எடுக்கப்பட்டன. எந்த ஒரு அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் சிங்களவர்கள் கூ பெரும்பான்மையுடன் எப்போது வேண்டுமானாலும் எங்கும் எடுக்க முடியும் என்பதை இவை அனைத்தும் காட்டுகின்றன.

எனவே உலகம் இலங்கையில் ஒரு முறை மட்டுமே அரசியல் தீர்வுக்கு வழி வகுக்கும், 13வது திருத்தத்திற்குப் பதிலாக, திரும்பப் பெற முடியாத, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட தீர்வு தேவை என்பதை உலகிற்கு உணர்த்த வேண்டும். செல்வம் அடைக்கலநாதன் சகல கட்சிகளையும் கூட்டி 13வது திருத்தத்தை முன்வைப்பது ஏன்? 13வது திருத்தம் 1987 இல் வந்தவுடன் இறந்துவிட்டது. அது மட்டுமல்லாமல் இந்தியா 13வது திருத்தத்தை பயன்படுத்தி இலங்கையை கட்டுப்படுத்த மாத்திரம் பயன்படுத்தியது. இந்தியா 13 ஐ நடைமுறைப்படுத்த நினைத்ததில்லை, வெறும் பேச்சு மாத்திரமே. செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அவரது பேச்சாளர் சுரேன் குருசாமி மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

வவுனியா நெடுங்கேணியில் சிங்களவர்களுக்கு 4000 உறுதி பத்திரங்களை தனது நட்பு ரணிலின் அரசாங்கம் வழங்கிய போது செல்வம் என்ன செய்தார், பிரதிநாடாளுமன்ற குழுக்களின் தலைவராக இருக்கும் போது, அடைக்கலநாதன், ரணில் அரசாங்கத்தை விமர்சித்ததில்லை. தமிழர் தாயகத்தில் 1000 பௌத்த விகாரைகள் கட்டுவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியதற்கு ஆதரித்து வாக்களித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரையும் நாங்கள் நம்பவில்லை. ஒரு எம்.பி எதிரியிடம் பணம் வாங்கினால், தயவுசெய்து அவர்களை நம்ப வேண்டாம். 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த பல சக்தி வாய்ந்த நாடுகள் மற்றும் ஐ.நா. ஆகியன முயற்சித்தன.

அதை இந்தியா ஒருபோதும் செயல்படுத்தாது. 13வது திருத்தத்தை இலங்கையை கட்டுப்படுத்தும் துரும்பாக மட்டுமே பயன்படுத்தும். எல்லாவற்றிற்கும் மேலாக, மேற்கூறிய 3 காரணங்களுக்காக 13 வது திருத்தம் தமிழர்களுக்கு பயனற்றது.13வது திருத்தத்திற்கு பதிலாக, போஸ்னியா பாணியிலான பேச்சுவார்த்தைதான் எமக்கு தேவை.

எனவே அனுபவமிக்க அரசியலமைப்பு அறிஞர்களைக் கொண்டு அரசியல் மத்தியஸ்தம் செய்யுமாறு அமெரிக்காவை கேட்டு கொள்கிறோம். தமிழர்கள் விரும்பும் பரஸ்பர இணக்கமான தீர்வுகள் மட்டுமே என்ற முடிவுக்கு அனைவரும் வருவார்கள் என நம்புகிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் ஒரு வாக்கெடுப்பை கேட்கிறோம். எனக் குறிப்பிட்டுள்ளனர்.

# சதாசிவம் அக்கரப்பத்தனை தோட்டத்திற்கு நேரடி விஜயம்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

இந்த நாட்டில் வாழும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் இன்று கம்பனி நிர்வாகத்திடம் கொத்தடிமைகளாக வாழ்வதற்கு காரணம் கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திடும் தொழிற்சங்கங்களே பதில் கூற வேண்டும். தொழிற்சங்க அனுபவம் இல்லாத தொழிற்சங்கவாதிகளே இன்று தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்தில் கைசாத்திடுகின்றனர் என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் 12 தோட்டங்களைச் கொண்ட 42 பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஒரு வாரகாலமாக வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் போராட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு கீழ் இயங்கும் தோட்டங்களுக்கு (19) நேற்று நேரடி விஜயமொன்றை மேற்கொண்டு அவர்ளின் பிரச்சினைகளை கேட்டறிந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்;

இன்று தொழிலாளர்கள் படுகின்ற இந்த அவலநிலை கஷ்டமான நிலைமைக்கு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் இரண்டு தொழிற்சங்கங்களே இதற்கு காரணம். இந்த இரண்டு தொழிற்சங்கங்களும் நாங்கள்தான் பெரிய தொழிற்சங்கங்கள் என மக்கள் மத்தியில் மார்பு தட்டி தன் பெருமைகளை பேசி மக்களை அதை புதை குழிக்குள் தள்ளி விட்டு விட்டார்கள். எமது மக்கள் இன்று திணறுகின்றார்கள். கம்பனிக்காரர்கள் செய்கின்ற அட்டகாசங்களை பார்க்கும்போது அன்று வெள்ளைக்காரர் காலத்தில்கூட இவ்வாறு தொழிலாளர்கள் கஸ்டங்களை அனுபவிக்கவில்லை.



இந்நிலையில் கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பெரிய தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இதுவரைக்கும் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா? ஆயிரம் ரூபா சம்பளம் தொடர்பான பிரச்சினைக்கு வழக்கு இருப்பது வேறு ஆனால் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பது என்பது தொழிற்ச்சங்கத்தின் பொறுப்பாகும். இது தெரியாதவர்கள் இன்று தொழிற்சங்கத்திலும் அரசியலிலும் இருப்பது வேடிக்கையாக உள்ளது. மக்களின் கஸ்ட நிலையை உணராது வெறுமனே பத்திரிகைகளுக்கும் ஊடகங்களுக்கும் அறிக்கை விடுப்பது என்ன பயன். அங்கத்துவம் பெறுவது சந்தாவிற்கு மாத்திரம் கிடையாது. தொழிலாளர்களின் உரிமைகளை தட்டி கேட்பதற்கே அங்கத்துவம் பெறுகின்றோம். மக்கள் பிரதிநிதிகள் வாய்களை மூடிக் கொண்டு இருக்காமல் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு கம்பனிகாரர்களுடன் உடனடியாக பேசி உரிய தீர்வினை தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என்றார்.

# மலையக தொழிலாளர்கள் சார்பாக பாதீட்டில் கவனம் செலுத்தாதவர்கள் குழு அமைத்து தீர்வை தருவார்களா?

## ராஜாராம் கேள்வி

(க.கிஷாந்தன்)

'அரசின் பங்காளி கட்சியாக இருந்து, கைகட்டி - மௌனம் காத்து, ஒட்டுமொத்த சமூகத்தையுமே காட்டிக்கொடுத்து கறுப்பாடுகளாக செயற்படுபவர்கள் மீண்டும் கூட்டு ஒப்பந்தத்துக்காக கூவுகின்றனர். மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனர்.' என்று மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான ராஜாராம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (19.12.2021) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறுஇ

'' மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வாங்கிக்கொடுத்துவிட்டோம் என மார்தட்டி, கேக் வெட்டி தொழிற்சங்க பிரமுகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் சம்பள உயர்வின் பயன் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு முன்னர் இருந்த சம்பளத்தை வைத்து கூட அம்மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். ஆனால் இன்று எத்தனை நாட்கள் வேலை வழங்கப்படும் என்பதுக்கூட கேள்விக்குரியாகவே இருக்கின்றது. முன்னர் எடுத்த சம்பளத்தைவிடவும் குறைவான சம்பளமே கிடைக்கப் பெறுகின்றது. மக்களின் வாழ்வில் நிம்மதியும் இல்லை.



அக்கரப்பத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு உரிய தீர்வை வாங்கிக் கொடுப்பதற்கு முன்னரே வேலைக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் எதற்காக தொழிலாளர்களை போராட்டத்துக்கு இறக்க வேண்டும்? மக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு இராஜாங்க அமைச்சர் பொறுப்புகூறவேண்டும்.

கூட்டு ஒப்பந்தம் இல்லாததால்தான் பிரச்சினையென காரணம்காட்டி, கூட்டு ஒப்பந்தத்துக்காக தொழிலாளர்களை தூண்டிவிடுகின்றனர். அன்று சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளம் நிர்ணயிக்கப்படும் போது, கூட்டு ஒப்பந்தம் இல்லாவிட்டால் சிக்கல் வரும் என்ற தூரநோக்கு சிந்தனை இவர்களிடம் இருக்கவில்லையா? தொழிலாளர்களை வஞ்சிக்கும் கூட்டு ஒப்பந்தத்துக்காகவே இவர்கள் செயற்படுகின்றனர். அரசில் அங்கம் வகிக்கின்றனர். அரசின் பலம் இருக்கின்றது. அதனை பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு ஏன் நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடியவில்ல?

அரசின் பங்காளி கட்சியாக இருந்து, கைகட்டி - மௌனம் காத்து, ஒட்டுமொத்த சமூகத்தையுமே காட்டிக்கொடுத்து கறுப்பாடுகளாக செயற்படுபவர்கள், பிரச்சினைகள் வரும் போது மட்டும் தொழிலாளர்களை தூண்டிவிடுகின்றனர். தாங்கள் அரசுக்குள் இருக்கின்றோம் என்பதை மறந்துவிடுகின்றனர். வரவு செலவுத் திட்டம் ஊடாகக்கூட எமது மக்களுக்கு எதுவும் ஒதுக்கப்படவில்லை. ஆனால் ஆணைக் குழு அமைக்கப்படும் என தொழில் அமைச்சர் இப்போது கூறுகின்றார். பாதீட்டில் கவனம் செலுத்தாதவர்கள் குழு அமைத்து தீர்வை தருவார்களா? இது வேடிக்கையான விடயம்.

அதேவேளை, இன்று வடக்கையும் குறிவைத்துள்ள சீனா, நாளை மலையகத்திலுள்ள தரிசு நிலங்களிலும் காலூன்ற முற்படலாம். அதற்கான வழியை இந்த அரசு அமைத்துக்கொடுக்கும். எனறார்.

# "கூட்டமைப்பு இனியும் பதிவு செய்யப்படாத கட்சியாக இருக்க முடியாது"

கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரைக்கும் 20 வருடங்களையும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் பதியப்படாத நிலையிலுள்ள ஒரு அரசியல் கூட்டாகவே இருக்கின்றது. இது மிகவும் துரதிர்ஸ்டவசமானது.

மலையக கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு முன்னணியை உருவாக்கியிருந்தார்கள்.மூன்று வருடத்திற்குள்ளே அவர்கள் அதனை ஒரு அரசியல்கட்சியாக பதிவுசெய்துள்ளார்கள்.

அந்தவகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் ஐயா தொடர்ச்சியாக இருந்துவருகின்றார். சம்பந்தர் ஐயா திருகோணமலை பாராளுமன்ற உறுப்புரிமையினை இராஜினாமா செய்யப்போவதாக தற்போது பத்திரிகை ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது. இது எந்தளவுக்கு உண்மையென்று தெரியாவிட்டாலும் அப்படியொரு நிலைமையேற்பட்டால் பாராளுமன்ற குழுக்களின் தலைவராக இருப்பவர் சம்பந்தன் ஐயா,பாராளுமன்ற உறுப்பினர் பதவி வலிதற்றதாகும் போது தலைமை பொறுப்பையும் இழப்பார்.

இருந்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை பொறுப்பிலிருந்து விலக்க வேண்டிய தேவையில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை வகிப்பவர் பாராளுமன்ற உறுப்பினராகயிருக்கவேண்டும் என்ற நியதியில்லை. அவர் விரும்பி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பதவியை துறப்பாரானால் தமிழ் தேசிய கூட்டத்தின் ஆரம்பத்திலிருந்து அங்கம் வகிக்கும் கட்சி என்ற அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கம் ஒரு உறுதியான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளது. இனியும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பதியப்படாமலிருக்கமுடியாது.

ஒரு தனிமனிதனின் தலைமைத்துவதிற்குள் இல்லாமல் இணைத்தலைமையொன்று உருவாக்கப்படவேண்டும் என்பதிலும் உறுதியாகவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிருவாகத் துறையும் இந்த நாட்டில் மோசமான நிலையில் இருக்கின்றது

மட்டக்களப்பு மாநகரசபையைப் பொருத்தமட்டில் கடந்த முதலாம் திகதி ஆளுநரால் மாநகரசபைக்குப் புதிய ஆணையாளர் நியமிக்கப்படுகின்றார். இருந்த பழைய ஆணையாளருக்கு இடம்மாற்றம் வருகின்றது. புதிய ஆணையாளர் கடமைகளைப் பொறுப்பேற்று அன்று பிற்பகலிலே திருகோணமலைக்கு அழைக்கப்படுகின்றார். மீண்டும் இரண்டு நாட்களுக்குப் பின்பு பழைய ஆணையாளர் திருகோணமலைக்கு அழைக்கப்படுகின்றார். அதேவேளை புதிய ஆணையாளர் காலையில் தன்னுடைய கடமைகளைப் பொறுப்பேற்று தனது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபடுகின்றார். அன்று பிற்பகலில் புதிதாக ஒரு தொலைநகல் வருகின்றது. புதிய ஆணையாளர் மீண்டும் திருகோணமலைக்குச் செல்ல பழைய ஆணையாளர் மீண்டும் மாநகரசபைக்கு பணிக்கு அமர்த்தப்படுகின்றார்.

ஒரு நிருவாகத்தை அரசியல் எந்தளவுக்குக் குழப்புகின்றது என்பதற்கு உதாரணமாக எதிரணி உறுப்பினர் ஒருவரைப் பார்த்து அந்த ஆணையாளர் நமது தலைவர் சாதித்துவிட்டார் எந்தவொரு அரசியல்வாதியும் செய்யாத கைங்கரியத்தைச் செய்துள்ளார் என்று கூறுவது இணையத்தளங்களில் பரவியிருக்கின்றது.

அது என்ன கைங்கரியம் ஒரு துஸ்பிரயோகம் நடத்தும் ஆணையாளரை மீண்டும் கொண்டு வந்ததுதான் அந்தக் கைங்கரியம். ஒரு நாட்டின் நிருவாகம் சீர்குலைந்தால் அந்த நாடு எவ்வாறு அபிவிருத்தியை அடையும் என்பதற்கு இந்த மாநகரசபையில் நடக்கும் நிகழ்வுகளே சான்றாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட 38 உறுப்பினர்களைக் கொண்ட மாநகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டு அமைத்திருக்கும் அந்த ஆட்சியைக் குழப்புவதற்காகவும், இந்த மாவட்டத்திலே மாநகரசபையினால் செய்யப்படும் அபிவிருத்தியைக் குழப்புவதற்காகவும் இப்படியொரு நிருவாக சீர்கேட்டைச் செய்திருக்கின்றார்கள். இது மிகவும் வருந்தத் தக்கதுடன், மாநகர மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்றாகும்.

அத்துடன், ஜனாதிபதியின் செயலாரால் தான் இந்த நாட்டில் நிருவாகம் சிர்குலைந்திருக்கின்றது. நாடு எதிர்நோக்கும் கஸ்டமான சூழ்நிலைகள் அனைத்திற்கும் காரணம் ஜனாதிபதியின் செயலாளர் கொடுக்கும் ஆலோசனைகள் தான் என்ற ரீதியில் அவரை மாற்றுங்கள் அல்லது தன் பதவியை இராஜனாமா செய்யப் போவதாக நாட்டின் ஜனாதிபதியின் சகோதரரும், அமைச்சருமான சமல் ராஜபக்ச அவர்கள் உள்ளிட்ட சிரேஸ்ட அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

எந்தவொரு நாடும் நீதித்துறை நிருவாகத் துறை, சட்டவாக்கல் துறை ஆகிய மூன்று துறைகளினால் ஆளப்பட வேண்டும். இந்த மூன்று துறைகளும் இன்று இலங்கையில் சீர்குலைந்து, ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் நேற்றைய தினம் பொத்துவில் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்றது. பொத்துவில் மற்றும் திருக்கோவில் பொலிஸ் நிலையங்களின் ஊடாக இவ்வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த விடயத்தைப் பார்க்கும் போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான வழக்காக அது தென்படவில்லை. ஏனெனில் ஏற்கனவே திட்டமிட்டு இந்தப் பொலிஸ் நிலையங்களினால் 32 பெயர்கள் அடங்கிய ஒரே பெயர்ப்பட்டியலைக் கொண்டு இரண்டு பொலிஸ் நிலையங்களிலும் அதே பெயர்கள் உள்வாங்கப்பட்டு இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது. ஆனால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பிரபலமான சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளாத சிலருக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதில் விசேடம் என்னவென்றால் செய்தி சேகரிக்க வந்த ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இதிலிருந்து தெரிகின்ற விடயம் ஒன்றே தமிழ் மக்கள் அவர்களது உரிமைகளைக் கேட்டுப் போராடும் போது அவர்களை நசுக்குவதற்காக திட்டமிட்டு ஆர்ப்பாட்டம் தொடங்குவதற்கு முன்னமே சிலரது பெயர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கெதிராக வழங்குத் தொடர்ந்திருக்கின்றார்கள். இந்த நாட்டின் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் மக்களை நீதித் துறையினூடாக அடக்கும் ஒரு அடக்குமுறையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

எந்தவொரு நாடும் நீதித்துறை நிருவாகத் துறை, சட்டவாக்கல் துறை ஆகிய மூன்று துறைகளினால் ஆளப்பட வேண்டும். இந்த மூன்று துறைகளும் இன்று இலங்கையில் சீர்குலைந்து, ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன. ஏனெனில் நீதித்துறை ஒழுங்காகக் செயற்படவில்லை என்பது இவ்வாறான வழக்குகள் மூலம் தெரிகின்றது. சட்டவாக்கல் துறை ஒழுங்கில்லை என்பது பாராளுமன்ற நடவடிக்கைகள் குழு பராளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு ஜனவரி 11ம் திகதி என ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தும், ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தக் கூட்டத் தொடரை 18ம் திகதி ஒத்திவைத்திருக்கின்றார். இதனூடாகச் சட்டவாக்கல் துறையும் ஒரு சீரான நிலையில் இல்லை என்பது புரிகின்றது.

# சோளத்தில் படைப்புழுத்தாக்கத்தை கட்டுப்படுத்த விழிப்பூட்டல் நிகழ்வு





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

சோளம் பயிர்ச்செய்கையில் படைப்புழு தாக்கத்தை கட்டுப்படுத்தி வெற்றிகரமாக சோளம் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் தொடர்பான ஒருங்கிணைந்த விழிப்பூட்டல் நிகழ்வு கிழக்கில் பரவலாக நடைபெற்றுவருகிறது.

மண்டூர் விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவின் கணேசபுரம் கிராமத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குலசிங்கம் கிலசன் தலைமையில் இத்தகைய விழிப்பூட்டல் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மண்டூர் விவசாய போதனாசிரியர் பி.பிரமேந்திரா கணேசபுரம் கமநல அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் சோளப்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன் போது விவசாய போதனாசிரியர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சோளப்பயிர்ச்செய்கையில் படைப்புழு தாக்கத்தை இனங்காண்பது எவ்வாறு? ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகளை கையாழ்வது எப்படி போன்ற தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டதோடு படைப்புழு தாக்கத்தை எதிர்கொள்வதற்கான புதிய நடுகை முறைமைகள் பற்றியும் பயிற்சியுடன் கூடிய தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன.

# கிண்ணியாவில் மரக்கறிச் செய்கை பாதிப்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, சோலை வெட்டுவான் கதிரடப்பஞ்சேனை முதலான பகுதிகளைச் சேர்ந்த மரக்கறி செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் சுமார் 25க்கும் மேற் மரக்கறிச் செய்கையாள்கள் 40 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் செய்கை மேற்கொண்டு வருகிறார்கள்

இம்முறை செய்கை பண்ணப்பட்ட மரக்கறி பயிர்கள் பசளை மற்றும் எண்ணெய் போதியளவு உரம் இல்லாததனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.





சேதனப் பசளை இம்முறை பயனியளிக்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்

பயிர்கள் வளர்ச்சி அடையாமை, மஞ்சள் நிறமாகக் காணப்படுகின்றமை, காய்கள் காய்க்காமையினால் பெரும் நஸ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்

அசாங்கம் பசளை, எண்ணையைத் தந்திருந்தால் நஷ்டம் ஏற்பட்டிருக்காது.

எனவே அரசாங்கம் இதற்கான உதவிகளை வழங்க வேண்டும் என மரக்கறிச் செய்கையாளர்கள் கோறுகின்றனர்.

# கடலரிப்பினைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்தின் மூலம் புதிய வேலைத் திட்டம்; ஒரு கோடி ஐம்பது இலட்சம் செலவில் முதற்கட்ட வேலை ஆரம்பம்







(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கரையோர கடற்கரைப் பிரதேசங்கள் சிலவற்றில் நிகழ்ந்து வரும் கடலரிப்பின் மூலமான தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் மூலம் புதிய வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் உல்லாசப் பயணிகளின் தளமாக உள்ள பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் நீண்ட காலம் பயன்பெறும் வகையிலும், அனைத்து கால நிலை மற்றும் அனர்த்தங்களுக்கு தாக்குப் பிடிக்கும் வகையிலும் நவீன முறையில் உருவாக்கப்பட்ட பொதிகளில் மணல் நிரப்பப்பட்டு கடற்கரைப் பகுதியில் ஆழமாய் தோண்டப்பட்டு இவ்வாறு மணல் மூடைகள் அடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத்திட்டமானது அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது வெற்றியளித்துள்ளதாகவும் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் கே.எம்.றிபாஸ் தெரிவித்தார். அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் நிகழ்ந்து வரும் கடலரிப்புப் தாக்கத்தினைக் கட்டுப் படுத்தும் வகையில் பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் அரசாங்கத்தினால் ஒரு கோடி ஐம்பது இலட்சம் ரூபா செலவில் மண் பொதியிலான அணைகள் இடப்பட்டு வருகின்றன. சுமார் இருநூறு மீற்றர் கடற்கரை நிலப்பரப்பில் இவ்வேலைத்திட்டம் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஷேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள இவ்வேலைத்திட்டம் இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வாவின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்று வருகின்றது.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாகயகம் ஆர்.ஏ.எஸ்.ரணவக்கவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்; இடம்பெற்று வரும் இவ்வேலைத் திட்டத்தின் மூலம் சர்வதேச ரீதியில் பொத்துவில் அறுகம்பைப் பகுதியில் வருடாந்தம் நடைபெற்று வரும் கடலலலைச்சறுக்கல் போட்டியானது கடலரிப்பினால் எவ்வித பாதிப்பினையும் தோற்றுவிக்காத வகையில் இவ்வேலைத்திட்டம் அமைவதாகவும் கடற்றொழிலாளர்களும் தமது தொழில் நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள ஏதுவாகவும் இவ் வேலைத்திட்டம் உள்ளது என துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக அம்பாறை மாவட்டத்தின் கடற்கரையோரப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் கடலரிப்பின் காணமாக தமது கடற்றொழில் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பயன்தரும் தென்னை மரங்கள் அழிவடைந்து வருவதுடன் பெருந்தொகை நிலப்பரப்புகளும் கடலரிப்பின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பினைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்தின் மூலம் நவீன கடலரிப்புப் பாதுகாப்பு முறையான மண் மூடைகள் அடுக்கப்படும் வேலைத் திட்டம் பாதுகாப்பானதாகவும் பயன்தரும் விடயமாகவும் உள்ளது என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# பாடசாலைப் பங்கேற்புடன் கூடிய கல்வி அபிவிருத்தி தொடர்பிலான பெற்றோருக்கான விழிப்புணர்வு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தில் பாடசாலைப் பங்கேற்புடன் கூடிய கல்வி அபிவிருத்தி தொடர்பிலான பெற்றோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று இடம் பெற்றது. முஸ்லிம் எயிட் நிறுவனம் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த நிகழ்வானது கல்வி அபிவிருத்தி திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ் விழிப்புணர்வு நிகழ்வு பெற்றார்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும் அவர்களுக்கான கற்றல்



உபகரணங்களை இத் திட்டம் ஊடாக வழங்கவுள்ளனர். இந் நிகழ்வில் முன்னால் ஓய்வு நிலை அதிபர் எம்.பி.எம்.முஸ்தபா, வலயக் கல்வி அதிகாரி ஏ.எம். ஹிதாயத்துள்ளா உட்பட 100 க்கும் அதிகமான பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர்.



# காத்தான்குடி மண்ணுக்கு இரட்டை பதக்கங்கள் காத்தான்குடி பாறூக் முகம்மட் முனீர் சாதனை

(மட்டு. துஷாரா)

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் வருடாந்தம் தேசிய ரீதியில் நடாத்தும் (Sahasak Nimavum National Invention and Innovation competition is an annual event organized by the Sri Lanka Inventors Commission) போட்டியில் கடந்த வருடம் Sahasak Nimavum 2020 காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த பாறுக் மொஹமட் முனீர் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப் படுத்தி, பங்குபற்றி தேசிய ரீதில் தங்கம் மற்றும் வெள்ளி என இரட்டைப் பதக்கங்களைப் வெற்றி பெற்றுள்ளார்.

16.12.2021 கொழும்பில் NIBM Auditoriumல் நடைபெற்ற Sahasak Nimavum 2020ற்கான விருது வழங்கல் நிகழ்விலேயே பாறுக் மொஹமட் முனீர் இரட்டைப் பதக்கங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். புத்தாக்கத்திற்காக ஒருவருக்கு இரண்டு கண்டு பிடிப்புக்களுக்காக இரண்டு விருதுகள் வழங்கப்பட்டது கிழக்கு மாகாணத்தில் இதுவே முதன் முறை என்பதுடன் இலங்கை வரலாற்றில் 2வது தடவையாகும்.

1. தங்கப் பதக்கம் - REMOTELY CONTROLLABLE SMART SWITCHING DEVICE, SYSTEM AND ASSOCIATED METHOD
2. வெள்ளிப் பதக்கம் - MULTI & FUNCTIONAL SMART WATER DISPENSING DEVICE, SYSTEM AND ASSOCIATED METHOD

இவர் கடந்த 2019இல் REMOTELY CONTROLLABLE SMART SWITCHING DEVICE, SYSTEM AND ASSOCIATED METHOD எனும் சாதனத்தை கைத்தொழில் மற்றும் வழங்கல் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையினுடைய 50ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடாத்தப்பட்ட INNOtec 2019 போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்றதன் அடிப்படையில் இவரது கண்டுபிடிப்பை ஆய்வுக்குட்படுத்தி மக்கள் இலகுவாக நீண்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கேற்ற வகையிலும் இது தயாரிக்கப்பட்டுள்ளதால் இந்த கண்டுபிடிப்புக்காக கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் விருது வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கலைஞர்கள் ஒரு பிரதேசத்தின் கலைச் சின்னங்கள் பதில் மாவட்ட செயலாளர் ஜேகதீஸன் தெரிவிப்பு

(ஏ.எச்.எம்.ஹாரிஸ், றாசிக் நபாயிஸ்)

பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்கள் அந்த பிரதேசத்தை பிரதிபலிக்கின்ற கலைச் சின்னங்கள் என அம்பாறை மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் வி.ஜெகதீஸன் தெரிவித்தார். நாவிதன்வெளி பிரதேச கலை இலக்கிய விழா பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே பதில் மாவட்ட செயலாளர் இந்த கருத்தை தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் வாழ்கின்ற கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் பிரதேச செயலகம் வருடம் தோறும் விழாக்களை நடத்தி வருகின்றது. பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச கலைஞர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி கொண்டிருக்கும் அதே வேளை பிரதேசத்தில் இருக்கின்ற கலைஞர்கள் கலை இலக்கிய செயற்பாடுகளில் வெற்றி பெற்று அந்த விடை



யங்களில் வேர் ஊன்றி சமூகத்தை வழிகாட்டுவதற்குரிய பாரிய பங்கு இதன் மூலமாக கிடைக்கின்றன. கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக அடையாள அட்டைகள் வழங்கப்படுகிறது. வயது முதிர்ந்த காலகட்டத்தில் ஓய்வூதிய திட்டங்களை வழங்குகின்றது, கலைப் படைப்புகளை பிரசுரிக்க கூடிய ஏற்பாடுகளை செய்துள்ளது. அதே போன்று கலாபூசணம் என்கின்ற உயர்ந்த விருது வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டில் அம்பாரை மாவட்டத்தில் ஆறு தமிழ் மொழி மூல கலைஞர்களுக்கு இவ்விருது கிடைக்க பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும். மேலும் மாகாண ரீதியாக வழங்கப்படுகின்ற முதலமைச்சர் விருது ஏனைய விருதுகள், பிரதேச மட்டத்தில் கலைஞர்களுக்கான 'சுவதம்' வேலைத்திட்டம் அவர்களின் குடும்பத்தோடு கௌரவிக்கும் வகையில் கலாச்சார திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன..

கலை இலக்கியச் செயற்பாடுகளில் இளம் மாணவர்களையும் அழைத்து செல்ல பாடசாலை மட்டத்தில் கலை இலக்கியப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் இதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பதன் ஊடாக இளம் கலைஞர்களை உருவாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும். வெறுமனே பாடப்புத்தகங்களை மைய்யமாக வைத்த கல்வித் திட்டத்தை நோக்கி போகாமல் அதனோடு இணைந்து பல்துறை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுத்தி செல்லும் போது ஆளுமை நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும் என தெரிவித்தார்.

# சௌபாக்கியா உற்பத்திக் கிராம பயனாளிகளுக்கு அங்கத்துவப் படிவம்





(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சௌபாக்கியா உற்பத்திக் கிராமங்களின் பயனாளிகளுக்கு அங்கத்துவப் படிவம் வழங்கி வைக்கும் நிகழ்வு 1%/12 வெள்ளிக்கிழமை பிற்பகல் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் ச.இராமநாதன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான அங்கத்துவப் படிவத்தினை வழங்கி வைத்திருந்தார். நிகழ்வில் மேலும் ஓர் அங்கமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விதை தானியம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

தென்மராட்சி பிரதேசத்தில் வரணி வடக்கில் 1.8மில்லியனில் பனை சார் உற்பத்திக் கிராமமும், மட்டுவில் சந்திரபுரத்தில் 1.4மில்லியனில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கிராமமும் அண்மையில் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டு பல பயனாளிகளை உள்ளீர்த்து வேலைத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருவதாக பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தெரிவித்திருந்தார்.

மேலும் நிகழ்வில் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.